Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

இலவசப் பிரதி

நாதம் -15 திருவள்ளுவர் ஆண்டு- 2035 புரட்டாதி-28 14-10-2004 வியாழக்கிழமை ஓசை -239

கணேசா நகைமாளிகை

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123. பஜார் வீதி, வவுனியா. T.P.-024-2222464

இல:194. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.-021-2225987

(சி-10478)



# பிரச்சினைகள் மிகவும் தீவிரமானவை; ஆயினும் பேச்சுவார்த்தை அவசியமானது!

## பி.பி.ஸிக்கு விதார் ஹெல்கேசன்

(லண்டன்)

**பிரச்சினைகள் மிகவும் தீவிரமானவை என்பதில் சந்தேகமில்லை. ஆனாலும் அவர்களுக்கிடையிலான இடைவெளிகள் குறைக்கப்பட்டு சமாதானப் பாலம் கட்டப்படவேண்டும் என நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் தெரிவித்துள்ளார்.**



இந்தியாவிற்கு விஜயம் செய்திருந்த அவர் பல அரசியல் கட்சிகளை சந்தித்த பின்னர் பி.பி.ஸி தமிழோசைக்குக் கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடங்கும் என்பதற்கான நம்பிக்கை எங்களிடம் இருக்கின்றது. நான் நம்பிக்கையோடு இருப்பதாகவோ நம்பிக்கை இழந்துவிட்டதாகவும், கூறவிரும்பவில்லை. ஆனால், தமக்கு நம்பிக்கை தேவை என்று மட்டுமே கூறுவேன் என நோர்வேயின் பிரதி வெளி

(12ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் ஓட்டோ சாரதி கடத்தப்பட்டுக் கொலை

(செட்டிகுளம்)



வவுனியாவில் இளம் குடும்பஸ்தர் ஓட்டோவுடன் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருப்பதாக வவுனியா பொலிசார் தெரிவிக்கின்றனர். சம்பவம் நேற்று முன்தினம் மதியம் இடம் பெற்றுள்ளது மதியம் வவுனியா நகர்ப் பகுதியில் இருந்து செட்டிகுளம் பகுதிக்கு ஓட்டோ போக வேண்டும் என்று மேற்படி ஓட்டோ வாடகைக்கு அமர்த்தப்பட்டது. பின்னர் ஓட்டோ அரசடிக்குளம் பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டது. பின்னர் சாரதி கத்தியால் குத்தப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கற்சிலை மருவில் மின்னல் தாக்கி உயர்தர வகுப்பு மாணவன் பலி

### தந்தையும், சகோதரியும் படுகாயம்

(ஒட்டுசுட்டான்)

கற்சிலைமடு சிலையடியில் மின்னல் தாக்கியதில் ஒருவர் சாவடைந்துள்ளார். அவரது தந்தையும், சகோதரியும் படுகாயம் அடைந்துள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் கற்சிலைமடுச் சிலையடியில் மின்னல் தாக்கியதில் விஜயரட்ணம் விஜயசுதர்சன் சாவடைந்துள்ளார். இவர் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய க.பொ.த (உயர்தர) வகுப்பு மாணவராவார். இறந்தவரின் தந்தையான இராசையா விஜயரட்ணம் (வயது-52), இறந்தவரின் சகோதரியான விஜயரட் ணம் மைத்தனா ஆகிய இருவரும் படுகாயம் அடைந்துள்ளார்கள்.

(5,8)

## —வல்வெட்டித்துறைக் க டற்பரப்பில் —
## கடற்றொழிலாளர் இருவர் மீது கடற்படையினர் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி, வல்வெட்டித்துறை கடற்பரப்பில் வைத்து கடற்றொழிலாளர்கள் இருவர் சிறிலங்கா கடற்படையினரால் கண்மூடித்தனமாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் வல்வெட்டித்துறை மதவடியைச் சேர்ந்த த.உதயகுமார் (வயது- 27), எஸ்.சூரியகுமார் (வயது- 30) என்ற இருவருமே கடற்படையினரின் தாக்குதலுக்கிலக்காகி காயமடைந்தவர்களாவார்.

மேற்படி இரு கடற் றொழிலாளர்களும் படகொன்றில் சென்று

(12ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் எரிபொருள், மா ஏற்றிச் செல்லும் பாரஊர்திகளுக்கு இராணுவப் பாதுகாப்பு

திருகோணமலையிலிருந்து வெளிமாவட்டங்களுக்கு எரிபொருள் மற்றும் கோதுமைமா ஏற்றிச்செல்லும் பாரஊர்திகளுக்கு நேற்று புதன்கிழமை இராணுவ பாதுகாப்பு வழங்கப்பட்டன.

எரிபொருள் மற்றும் கோதுமைமா ஏற்றிச்செல்லும் பாரஊர்திகளைத் தடுக்கும் முகமாக வீதி மறிப்புப் போராட்டம் நடத்தப் போவதாக வடக்குக் கிழக்கு சிங்கள மக்கள் சங்கம் அறிவித்ததையடுத்து அரசாங்கம் முப்படைகள் மற்றும் பொலிசார் மூலம் இந்த மாற்று நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

விடுதலைப்புலிகளினால் கைது செய்யப்பட்டுள்ள இரண்டு சிங்கள ஊர்காவல் படையினரை விடுவிக்கக்கோரி மீண்டும் வீதிமறிப்புப் போராட்டம் நடத்தப் போவதாகவும் ஹர்த்தால் நடத்தப்போவதாகவும் வடக்குக் கிழக்கு சிங்கள மக்கள் சங்கம் நேற்று முன்தினம் அறி வித்திருந்தது. சுமார் 200 பௌத்த குருமார்கள் ஹபரணையிலிருந்து திருமலை நோக்கி வரப் போவதாகவும் ஒரு வதந்தி பரவியிருந்தது. இந்த நிலையில் நேற்றுப் பௌத்த மதகுருமார்கள் மற்றும் ஆதரவாளர்கள் சிலரும் சேர்ந்து

(12ஆம் பக்கம் பார்க்க)

### விபத்தில் படுகாயம்

முத்தையன்கட்டிலிருந்து கற்சிலைமடு நோக்கி அதிவேகமாக வந்த உந்துருளி மணல் பிட்டியில் ஏறி விழுந்ததில் யாழ்ப்பாணம் கம்பர்மலையைச் சொந்த இடமாகக்கொண்ட வீரகத்தி விவேகானந்தம் என்பவர் படுகாயம் அடைந்த நிலையில் திலீபன் மருத்துவ

(12ஆம் பக்கம் பார்க்க)

## – மனித உரிமைகள் அதிகாரிகள் மீதான தாக்குதல் –
## இரு பொலிஸ் அதிகாரிகள் அடையாளம் காணப்பட்டனர்

(கொழும்பு)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரிகள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் இடம்பெற்ற அடையாள அணிவகுப்பில் தொடர்புடையதாகக் கூறப்படும் இரு பொலிசார் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இணைப்பதிகாரி ஆர். பி.றுவான் சந்திரசேகர 20ஆம் சந்தேக நபராகக் குற்றஞ்சாட்டப்பட்ட தனபால எனும் பொலிஸ் அதிகாரிகளை,

(12ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர்,போராளிகள் குடும்பங்களுக்கு பள்ளிக்குடாவில் வீடுகள் கையளிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கடற்புலிகளின் அரசியல்துறையினரின் ஏற்பாட்டில் தமிழீழ நிர்வாக சேவையினரின் அனுசரணையுடன் பூநகரி பள்ளிக்குடா 4ஆம் கட்டைப் பகுதியில் அமைக்கப்பட்ட 5 வீடுகள் மாவீரர், போராளி குடும்பத்தினரிடம் நேற்று கையளிக்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை 3.30மணியளவில் பூநகரி பள்ளிக்குடா 4ஆம் கட்டையில் அமைக்கப்பட்ட வீட்டுத் தொகுதியில்ஆரம்பமான இந்நிகழ்வில் பொதுச்சுடரை பூநகரிப்பிரதேச செயலாளர் சிறீஸ்கந்தகுமார் ஏற்றிவைத்தார். அடுத்து தமிழீழ தேசியக்கொடியை கடற்புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழன் எற்றிவைத்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)



மோகன் அவர்கள் சுடரேற்றுகிறார்



மங்களேஸ் அவர்கள் வீடொன்றைத் திறந்து வைக்கிறார்

## சீனன்குடா சீமெந்து ஆலையை இலக்கு வைத்து கைக்குண்டு வீச்சு

சீனன்குடாவில் உள்ள தனியார் சீமெந்து ஆலையை இலக்கு வைத்து கிரனேட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் அச்சம்பவத்தில் எவரும் காயமடையவில்லை என்றும் பொலிசார் தெரிவித்தனர்.

நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றதாகவும் அவர்கள் கூறினர். கடற்கரைப் பக்கத்திலிருந்து வந்த ஒருவரே இக் கிரனேட்டை வீசினார் என்றும் கிரனேட் தொழிற்சாலை வளவிற்குள் விழுந்து வெடித்ததாகவும் பின்னர் இராணுவத்தினர் அங்கு விரைந்து சென்று வெடித்த குண்டின் கிளிப்பைப் பொறுக்கி எடுத்துச் சென்றதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. இச் சம்பவம் பற்றி பொலிசார் விசாரணை நடத்துகின்றனர்.

(25)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

நவரத்தினம் சுரேஸ்குமார் ஆகிய எனது கைப்பை ஒன்று ஆனையிறவிற்கும், பரந்தனுக்கு மிடையில் தவறிவிட்டது. (115-3953 மோட்டார் சைக்கிள் புத்தகம் உட்பட) கண்டெடுத்தவர்கள் ஈழ நாதம் பணிமனையில் அல்லது பரந் தன் சந்தியில் உள்ள தென்றல் பல்பொருள் வாணிபத்தில் ஒப் படைக்கவும். தகவல் ந. சுரேஸ் குமார். (5178)

## மரக்கறி கொள்வனவு நிலையம் அமைத்தல்

பூநகரிப் பிரதேசத்தில் ஏற்றுமதி நோக்கத்திற்காக மரக்கறி கொள் வனவு நிலையம் அமைப்பது தொடர்பாக கலந்துரையாடவிருப் பதால் பூநகரி கமக்கார அமைப்புத் தலைவர்கள், செயலாளர்கள் ஆகியோரை இன்று காலை10.00 மணிக்கு வருகை தருமாறு பிர தேச செயலர் கேட்டுள்ளார். இக் கலந்துரையாடலில் கமக்கார அமைப்பின் ஆலோசனைகள் ஏற்றுக்கொள்ளப்படும். (34)

# தமிழ்மொழி கலைத்திறன் போட்டியில் வெற்றி பெற்றோருக்குப் பரிசில் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ கல்விமேம்பாட்டு பேர வையினரால் பாடசாலைகளுக் கிடையே மாவட்ட ரீதியில் நடாத்தப் பெற்ற தமிழ் மொழித் திறன் போட்டியில் தமிழ்மொழிவாழ்த்து, கொடிவணக்கப்பாடல் மற்றும் கருத்துவெளிப்பாட்டுச் சித்திரம் ஆகியவற்றில் தெரிவுசெய்யப் பெற்ற மாணவர்களுக்கு நேற்று பணப்பரிசில்களும், சான்றிதழ் களும் வழங்கி கௌரவிக்கப் பெற்றது.

கிளிநொச்சி கல்வி வள நிலையத்தில் நேற்றுப்பிற்பகல் 3.00மணிக்கு தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில் களையும், சான்றிதழ்களையும் கல்விக்கழகப் பொறுப்பாளர் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் மாணவர்களுக்கு வழங்கிக்கௌர வித்தனர்.

தமிழ்மொழி வாழ்த்துப் போட்டியில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மாண விகள் முதலாமிடத் தினையும், கிளிநொச்சி இந்துக்கல்லூரி மாணவிகள் இரண்டாமிடத்தினை யும் , முல்லை மாங்குளம் மகாவித் தியாலயம் மூன்றாமிடத்தினையும் பெற்றுக்கொண்டனர். தமிழ்த்தாய் வாழ்த்துப்போட்டியில் முல்லை/ புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய மாணவிகள் முதலாமிடத்தினையும், கிளிநொச்சி இந்துக்கல்லூரி மாண விகள் இரண்டமிடத் தினையும், முல்லை/தேராங்கண்டல் அ.த.க. பாடசாலை மாணவிகள் மூன்றா மிடத்தினையும் பெற்றுக் கொண்டனர்.

கொடிவணக்கப்பாடல் போட்டி யில் முல்லை/கலைமகள் வித்தி யாலய மாணவிகள் முதலாமிடத் தினையும், பூநகரி நாச்சிக்குடா அ.த.க.பாடசாலை மாணவிகள் இரண்டாம் இடத்தினையும், முல்லை யோகபுரம் மகாவித்தியா லய மாணவிகள் மூன்றாமிடத் தினையும் பெற்றுக்கொண்டனர்.

முறையே முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கு 2500,2000, 1500 ரூபாய் பணப்பரிசு வழங்கப்பெற்றதுடன் சான்றிதழ் களும் வழங்கிக் கௌரவிக்கப் பட்டுள்ளனர்.

**தமிழ்மொழிக் கலைத்திறன் சித்திரப்போட்டி**

பிரிவு 01 இல் முதலாமிடத்தினை கிருஸ்ண மூர்த்தி சொலமன்ராஜ் கிளி/ தருமபுரம் எண் 1 அ.த.க.பள்ளி இரண்டாம் இடத்தினை ம.தினேஸ் மு.விக்கினேஸ்வரா வித்தியா லயம்.

பிரிவு- 02 இல் முதலா மிடத்தினை பாலசுப்பிரமணியம் பபிலன் கிளி/ திருவையாறு ம.வி இரண்டாமிடத்தினை ஜெகதீஸ்வரன் ஜெனார்த்தகன் மு/ யோகபுரம் ம.வி.

பிரிவு-03 இல் முதலாமிடத் தினை மாடசாமி சசிக்குமார் மு/ முத்துஐயன் கட்டு வலதுகரை அ.த.க.பள்ளி, இரண்டாமிடத்தினை உதயசூரியன் அனுராஜ் கிளி/ பூநகரி நல்லூர் ம.வி.

பிரிவு-04 இல் முதலாமிடத் தினை சிறிஸ்கந்தராஜா டுஸ்யந்தன் மு/ கலைமகள் வித்தியாலயம், இரண்டமிடத்தினை உதயகுமார் சதீஸ், கிளி/ ஜெயபுரம் அ.த.க. பள்ளி.

பிரிவு-05இல் முதலாமிடத்தினை கிருஸ்ணகாந்தம் ஐங்கரன் கிளி/ உருத்திரபுரம் ம.வி, இரண்டா மிடத்தினை கறுப்பையா யோக ராசா மு /உடையார்கட்டு ம.வி ஆகியோர் பெற்றுக்கொண்டனர். (சோ,கு)







# இரு சக்கர உழவு இயந்திரங்கள் கிளி.விவசாயிகளுக்கு வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

நெதர்லாந்து அரசாங்கத்தின் உதவியுடன் கிளிநொச்சி மாவட்ட நிகொட் திட்டத்தினால் கமநல சேவை நிலயத்தின் ஊடாக கிளிநொச்சி மாவட்ட எட்டுக் கமநல கேந்திர நிலையங்களுக்கும் இரு சக்கர உழவு இயந்திரங்கள் விவசாய மக்களிடம் கையளிக்கும் வைபவம் நேற்று நடைபெற்றன.



நேற்றுக்காலை 10.00 மணியளவில் கிளிநொச்சி கமநல சேவைகள் திணைக் கழத்தில் அதன் உதவி ஆணையாளர் இராச சிங்கம் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் மங்கல விளக்கினை கிளி நொச்சி மாவட்ட அர சாங்க அதிபர், தி.இராசநாயகம், நிகொட் திட்டப் பணிப் பாளர் பார்த்தீபன், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன், மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம், உதவி விவசாயப் பணிப் பாளர் திருமதி. ஆனந்தராசா, கமநல சேவை உதவி ஆணையாளர் நாமகள் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.



தமிழீழ தேசியக்கொடியினை பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் ஏற்றிவைத்தார். மண்டபத்தில் வரவேற்புரையினைத் தொடர்ந்து தலைமையுரை இடம்பெற்றது.

அடுத்து நிகொட் திட்டப் பணிப்பாளர் பார்த்தீபன், கிளிமாவட்ட விவசாய சம்மேளனத் தலைவர் மனோகரன், உதவி விவசாயப் பணிப்பாளர் திருமதி ஆனந்தராசா, மேலதிக அரச அதிபர் வேதநாயகம், நீர்ப்பாசனத் திணைக்கள உதவி ஆணையாளர் கந்தசாமி, பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் ஆகியோரது உரைகள் இடம்பெற்றன.

தொடர்ந்து சிறப்புரையினை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் நிகழ்த்தினார். அடுத்து இரு சக்கர உழவு இயந்திரங்கள் கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. இதனை, அரச அதிபர் நிகொட் திட்டப் பணிப்பாளர், பொருண்மிய மேம்பாட்டுப் பொறுப்பாளர் ஆகியோரால் இரு சக்கர உழவு இயந்திரங்கள் எட்டு கமநல சேவை கேந்திர நிலையங்களின் தலைவர்களிடம் கையளிக்கப்பட்டன.

இதில் ஒவ்வொரு கமநல சேவை நிலையங்களுக்கும் இரண்டு இருசக்கர உழவு இயந்திரங்கள் வீதம் வழங்கப்பட்டன. அத்துடன் அதற்குரிய பெட்டி, வீல் என்பனவும், மற்றும் இயந்திரத் தெளிகருவி, நீர் இறைக்கும் இயந்திரம் என்பனவும், வழங்கப்பட்டன.

ஒவ்வொரு கமநலசேவை நிலையத்திற்கும் 10 தெளிகருவியும். ஒவ்வொரு நீர் இறைக்கும் இயந்திரமும் வழங்கப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது. (கு,தீ)

## சிறுவர்தினப் போட்டி

பூநகரிக் கோட்டப் பாடசாலைக் கிடையே சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு "பிள்ளை களுக்கான சினேகபூர்வ சமுதா யத்தைக் கட்டி எழுப்புவோம்" என்ற தலைப்பில் கட்டுரைப் போட்டி இன்று வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு பூநகரி ம.வி.யில் இடம்பெறும். கட்டுரைப் போட்டியில் சிறுவர் உரிமைகள் அவைகளைப் பாதுகாத்தல் என் னும் கருத்துக்களைப் பிரதி பலிக்கும் வகையில் கட்டுரை அமைத்தல் வேண்டும். 6-9 வரை ஒரு பிரிவாகவும், 10-13 வரை ஒரு பிரிவாகவும் நடைபெறும். பூநகரிக் கோட்டப் பாடசாலைகளில் இருந்து ஒவ்வொரு பிரிவிற்கும் மூன்று மாணவர் வீதம் அனுப்பிப் போட்டியில் கலந்துகொள்ளுமாறு கோட்டக்கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொள்கின்றார். (34)

## கலந்துரையாடல்

பூநகரிக் கோட்டப் பாடசாலை களில் கல்வி பயிலும் மாணவர் களின் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு நாளை வெள் ளிக்கிழமை பி.ப.2.00 மணிக்கு சமூகமளிக்குமாறு பிரதேச செய லர் மா.சிறீஸ்கந்தகுமார் கேட்டுள் ளார். இதற்கான அனுமதியை ஒவ்வொரு பாடசாலை முதல வர்க் கும் வலயக்கல்விப் பணிப்பாளர் கடிதம் மூலம் அனுப்பியுள்ளாா. (34)

## அதிபர் கூட்டம்

பூநகரிக் கோட்டப் பாடசாலை களிற்கான அதிபர் கூட்டம் நாளை காலை 10.00 மணிக்கு பூநகரி ம.வி.யில் கோட்டக்கல்விப் பணிப் பாளர் தலைமையில் நடைபெறும். (34)

## போட்டிகள்

முதியோர் தினத்தை முன் னிட்டு கடந்த 8ஆம் திகதி பூநகரி ம.வி. இல் கவிதை, கட்டுரை, பேச்சுப்போட்டிகள் நடைபெற்றன. இதற்கான ஏற்பாடுகளைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் தி.கணபதிப் பிள்ளையும் பாடசாலை முதல்வர் பொன்தில்லைநாதனும் மேற்கொண் டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (34)

# புதுக்குடியிருப்புப் பகுதியில் முதலாவது மேய்ச்சல் தரை

### - 16ஆம் திகதி அங்குரார்ப்பணம்

தமிழீழ தேசத்தில் முதலாவது மே ய்ச்சல் தரை புதுக்குடியிருப்பு கேப்பாப்புலவு வீதியில் இருக்கும் வெட்டிக்குளத்தின் நீரேந்து பிரதேசத்தில் அமைப்பதற்கான.சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப் பட்ட நிலையில் இதன் அங்குரார்ப்பண நிகழ்வும், அதன் உடன் இணைந்த பயிற்சியும் வரும் 16ஆம் திகதி காலை 10.00மணிக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் தலைமை யில் இடம்பெற இருப்பதால் இந்த நிலையில் அனைத்துக் கால்நடை வளர்போரையும் கலந்து பயன்பெறுமாறும் அத்துடன் பண்ணை யாளர்களுக்கு காணிப்பங்கீடு செய்ய இருப்பதால் தவறாது கலந்து கொள்ளுமாறும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (08)


## வீரவணக்கம்

### 04ஆம் ஆண்டு நினைவலைகளில்



தமிழீழ காவல்துறை
தலைமைக்காவலர் சி.சிவதர்சினி

**சிவஞானம் சிவதர்சினி**
மங்கை குடியிருப்பு, மல்லாவி.

13.10.2000 அன்று கிளாலிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலின்போது வீரச் சாவடைந்தார். இம்மாவீரருக்கும், இந்நாளில் வீரச் சாவடைந்த அனைத்து மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

"தமிழீழ காவல்துறையினர்"

(5184)

# ஈராக் புனரமைப்பிற்கு உதவும் நாடுகளின் கூட்டம் டோக்கியோவில் நேற்று ஆரம்பம்

## துரித நடவடிக்கைக்கு ஈராக் வலியுறுத்து

(டோக்கியோ)

**ஈராக்கின் புனரமைப்பிற்கென உதவி வழங்கும் நாடுகள் குழுவின் 2 நாள் கூட்டம் டோக்கியோ நகரில் நேற்று ஆரம்பமாகியுள்ளது. இதில் 55 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டுள்ளனர்.**

இக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஈராக்கியப் பிரதிநிதிகள் அங்கு உரை நிகழ்த்துகையில் வன்செயல்களினாலும் கிளர்ச்சிவாத நடவடிக்கையினாலும் ஸ்தம்பிதமடைந்துள்ள புனரமைப்பு நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள நிதியுதவி அவசியமென்று தெரிவித்தார்கள்.

புதிய முறையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு புனர் நிர்மாண முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டால் தான் சனவரி மாதத்தில் தேர்தலை நடத்த முடியுமென்றும் அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர். இதற்கென மொத்தமாக 12500 கோடி டொலர்கள் உடனடியாக தேவைப்படுமென்று கோரிக்கைகள் விடப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் 55 நாடுகளினதும், சர்வதேச அமைப்புகளினதும் பிரதிநிதிகள் பங்குபற்றுகின்றனர். கடந்த யூன் மாதத்தில் ஈராக்கின் நிர்வாகம் இடைக்கால அரசிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் இடம்பெறும் உதவி வழங்கும் நாடுகளின் முதலாவது கூட்டம் இது வென்பது குறிப்பிடத்தக்கது.



ஜப்பான் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் கற்சுயா ஒகாடாவின் கேள்வியொன்றின் போது ஜப்பானியப் பிரதமர் யுனிசிறோ கொசூமி(வலம்) நிதியமைச்சர் சடககு ரெனிக்காசி ஆகியோரின் உணர்வலைகளைப் படத்தில் காண்க.

## மசகு எண்ணெய் விலை உயர்வு!

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் விலை பீப்பா ஒன்றிற்கு இதுவரை இல்லாத அளவிற்கு அதிகரித்துள்ளது.

54 டொலர்களாக பீப்பா ஒன்றின் மசகுஎண்ணெய் விலை உயர்ந்து காணப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.



ஈராக்கின் பஸ்ராவில் நேற்று முன்தினம் குண்டொன்று வெடித்ததையடுத்து அப்பகுதியை சூனியப் பிரதேசமாக்கும் பிரித்தானிய இராணுவத்தினர்.

# ஆசியாவில் அமெரிக்கா ஆதிக்கம் செலுத்த இந்தியாவின் நெருக்கமான உறவு அவசியம்!

### –அமெரிக்க வெளியுறவுத் துறை நிபுணர் கருத்து

(வோஷிங்டன்)

"ஆசியப் பகுதியில் அமெரிக்கா ஆதிக்கம் செலுத்துவதற்கு இந்தியாவுடன் நெருக்கமான உறவு இருக்கவேண்டியது அவசியம் என்று அமெரிக்க நிர்வாகம் கருதுகிறது. ஏனென்றால் வளர்ந்து வரும் பொருளாதாரத்தைக் கொண்ட இராணுவப் பலம் மிக்க நாடாக இந்தியா உருவெடுத்து வருகிறது. என்று அமெரிக்காவைச் சேர்ந்த வெளியுறவுத்துறை நிபுணர் டாபர்ட் பி.சட்டர் கூறியுள்ளார். வோஷிங்டனில் உள்ள ஜார்ஜ்டவுண் பல்கலைக்கழகத்தின் வெளியுறவுத்துறையில் பேராசிரியராகப் பணிபுரியும் அவரும் வேறுசில அரசியல் நிபுணர்களும் எழுதியுள்ள நூலில் மேற்கண்ட கருத்துகளை டாபர்ட் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது, அமெரிக்காவுக்கும் தனக்கும் பல விஷயங்களில் ஒத்த கருத்து இருப்பதாக இந்தியா கருதுகிறது. இராணுவ ஒத்துழைப்பு உட்பட இருதரப்பிற்கும் இடையே பலதுறைகளில் உறவுநெருக்கமடைந்து வருகிறது. அமெரிக்க சனாதிபதியாக கிளிண்டன் இருந்தபோது நெருக்கமடைந்த உறவில் அமெரிக்காவின் ஈராக் போரினால் பின்னடைவு ஏற்பட்டது.


ஆசியாவில் உள்ள பல நாடுகள் பொருளாதார ரீதியிலும் இராணுவ ரீதியிலும் அமெரிக்காவுடன் நெருக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள ஆர்வமாக உள்ளன. அதனால் ஆசியப் பிராந்தியத்தில் அமெரிக்காவின் அதிகார ஆதிக்கம் நிலவுகிறது. அதேநேரத்தில் ஆசியாவில் பொருளாதார ரீதியிலும் இராணுவப் பலத்திலும் இந்தியா முன்னேறிவருகிறது. எனவே தனது அதிகார பலத்தை ஆசியாவில் நிலைநாட்ட இந்தியாவின் உறவு முக்கியம் என அமெரிக்க அரசு கருதுகிறது என்று டாபர்ட் சட்டர் குறிப்பிட்டுள்ளார்.

# மனநோயாளரைக் குறைக்க சீனா அவசர நடவடிக்கை

(பெய்ஜிங்)

சீனாவில் இளைஞர்கள், குழந்தைகளிடையே மன நோய் அதிகரித்து வருகின்றது. இது சீன அரசுக்குப் பெரும் கவலையை ஏற்படுத்தி வருகிறது. எனவே மன நோய் பெருகிவருவதைத் தடுக்க கல்வி அறிவை அதிகரிப்பது, ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிப்பது என அது முடிவு செய்துள்ளது.

2010 இற்குள் மனநோய் பாதிப்பை 12 சதவீதமாகக் குறைக்க அது இலக்கு நிர்ணயித்துள்ளது. 13 ஆவது உலக மனநல தினத்தையொட்டி ஏற்பாடு செய்த நிகழ்ச்சியில் சீன சுகாதார அமைச்சர் சூ கிங்ஷெங் இத்தகவலைத் தெரிவித்தார். மனித ஆற்றல் மேம்பாட்டுக்குப் பெரும் தடையாக இருக்கிறது மனநோய்ப் பிரச்சினைகள். மனநலம் தொடர்பான கல்வி, பயிற்சி அளிக்க வகை செய்யும் விதத்தில் நீண்டகால செயற்றிட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி பள்ளி ஆசிரியர்கள், டாக்டர்களுக்குப் பயிற்சி தரப்படும். மாணவர்களுக்கு மனநோய் இருந்தால் அதை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை அளிக்க முடியும் என்றார். சீனாவில் 17 வயதிற்குக் கீழ் 34 கோடி பேர் உள்ளனர். இவர்களில் 3 கோடி பேருக்கு மனநலக் குறைபாடுகள் உள்ளன எனப் புள்ளிவிபரம் தெரிவிக்கின்றது.



பாகிஸ்தான் நேற்று முன்தினம் பரீட்சித்துப் பார்த்த "கோரி-5" ஏவுகணை (இது 1500 கிலோ மீற்றர் வரை சென்று தாக்கவல்லது).



நேற்று முன்தினம் வோஷிங்டன் நகருக்கு அண்மையிலுள்ள ஹெலன் எரிமலை வெடித்துச் சிதறியபோது அதன் தோற்றம்.

# பெண்களுக்கு வாக்குரிமை வழங்க மறுப்பு!

பெண்களுக்கு வாக்குரிமை அளிக்க முடியாது என்று சவுதி அரேபியா திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது. அந் நாட்டின் உள்துறை அமைச்சர் பிரின்ஸ் நய்.:.ப் குவைத்தில் நிருபர்களிடம் இதைத் தெரிவித்தார். சவுதியில் முதல் முறையாக நாடு முழுவதும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல் நடைபெறவுள்ளது.

வளைகுடா நாடுகளில் சனநாயக சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்த வளைகுடா ஒத்துழைப்புக்கவுன்சில் முயற்சி செய்து வருகிறது. சவுதி அரேபியா, கட்டார், பஹ்ரைன், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், குவைத், ஓமன் ஆகிய நாடுகள் இக்கவுன்சிலில் இடம் பெற்றுள்ளன. இங்கு பெண்கள் போட்டியிடத் தடை உள்ளது. இந்த ஆறு நாடுகளில் கட்டார் மட்டுமே ஆண்களுக்கு நிகராக பெண்களுக்கு ஓரளவு சம அந்தஸ்து வழங்கி உள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஆப்கானிஸ்தான் சனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியாக 3 வாரங்கள் ஆகும்!

### வாக்களிப்பில் மோசடியென முறைப்பாடு

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் நடத்தப்பட்ட சனாதிபதித் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளை எண்ணும் நடவடிக்கைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆப்கானிஸ்தானின் தூர உள்ள பிரதேசங்களிலிருந்து உலங்கு வானூர்திகள் மூலமும், வாகனங்கள் மற்றும் கழுதைகள் மூலமும் வாக்குகள் கொண்டு வந்து சேர்க்கப்பட்டுள்ளதாகவும், அளிக்கப்பட்ட வாக்குகள் அனைத்தையும் எண்ணிக் கணக்கிடுவதற்கு 3 வாரங்கள் ஆகலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இருந்த போதிலும் தென்பகுதி வாக்குகள் அடுத்த திங்கட்கிழமை வரையில் தான் எண்ணப்படும் என்று ஐக்கியநாடுகள் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதற்கிடையில் தேர்தலில் மோசடி இடம் பெற்றதாகக் கூறி தேர்தலில் இருந்து விலகிக் கொள்ளப்போவதாக அறிவித்த பல வேட்பாளர்கள் தங்களது அறிவிப்பை வாபஸ் பெற்றுள்ளார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதற்கான நடவடிக்கைகளை ஆப்கானிஸ்தானிலுள்ள அமெரிக்கத் தூதுவர் மேற்கொண்டிருந்தார். இருந்த போதும் இந்தக் குற்றச்சாட்டுக்கள் பற்றி உத்தியோக பூர்வமற்ற முறையில் விசாரணை மேற்கொள்ளப்படுமென்று ஆப்கானிஸ்தான் ஐக்கிய நாடுகள் கூட்டுத் தேர்தல் முகாமைத்துவ அமைப்புத் தெரிவித்துள்ளது.



வாக்குப்பெட்டிகள் உலங்கு வானூர்தி மூலம் கந்தகாருக்கு எடுத்து வரப்படுகிறது.

# மசகு எண்ணெய் விலையேற்றம் பரிசீலிக்க இந்தியா முடிவு

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை அதிகரிப்பையடுத்து பெற்றோல், டீசல் விலைகளை இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் மறுஆய்வு செய்யவுள்ளார். இதனை நேற்று புதுடில்லியில் பெற்றோலியத் துறை அமைச்சர் மணிசங்கர் ஐயர் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

அத்துடன் கடந்த ஓகஸ்ட் மாதம் தொடக்கம் இவற்றின் விலைகளில் மாற்றம் ஏதும் செய்யப்படவில்லை என்றும், பெற்றோலியப் பொருட்களின் விலை தொடர்பாக அனைத்துத் தகவல்களையும் பிரதமரிடம் தாம் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் விலை மாற்றம் குறித்து, பிரதமர் தான் முடிவு எடுப்பார் என்றும் தெரிவித்துள்ளார்.

# சுடுகலன்களை அரசிடம் ஒப்படைக்கும் தே.கொள்கையை செயற்படுத்தவென ஆணைக்குழு அமைக்க சனாதிபதி முடிவு

(கொழும்பு)

**நாட்டிலுள்ள சுடுகலன்களை அரசாங்கத்திடம் ஒப்படைப்பதை ஒரு தேசியக் கொள்கையாக்கி அதற்கென தேசிய ஆணைக்குழுவொன்றை சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா நியமிக்கவுள்ளார்.**

பொதுக்கட்டளை மற்றும் உள் நாட்டுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திலக்ரணவிராஜா கடந்த திங்கட்கிழமை ஊடகமாநா டொன்றில் இதனைத் தெரிவித் துள்ளார்.

இலங்கையில் சுடுகலன் முகாமைத்துவத்தின் தோற்றங்கள் மற்றும் விநியோகம் என்பனவற்றிலான கல்வி நடவடிக்கையை இந்த ஆணைக்குழு மேற்கொள்ளும் என்றும்,

முன்னாள் ஐக்கிய நாடுகள் ஆயுதப்பிரிஹரண விவகாரங் களுக்கான இரண்டாம் நிலைச் செயலாளர் ஜயந்த தனபாலவின் ஆலோசனையின் பேரிலேயே இந்த ஆணைக்குழு அமைக்கப்பட வுள்ளதாகவும், நிரந்தர செயலகத்தைக் கொண்டதாகவும், ஐக்கிய நாடுகள் சபையின் நிதியுதவியுடன் இது இயங்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் பிரதிநிதிகள் எட்டுப்பேரும் அமைச்சரால் நியமிக்கப்படும் மூவரும் மற்றும் குடியுரிமை பெற்ற பிரஜைகள் மூவருமாக 14பேரும் செயலாளருடன் பதினைந்து உறுப்பினர்களைக் கொண்டதாக இந்த ஆணைக்குழு அமையும் என்றும் திலக்ரண விராஜா தெரிவித்ததாக 'டெய்லி நியூஸ்' செய்தியொன்று கூறுகின்றது.

# சாரணர் தலைவர்களுக்கு நாளை கலைக்கூறு II பயிற்சி ஆரம்பம்

சாரணர் தலைவர்களுக்கும், குருளைச் சாரணர் தலைவர் களுக்கும் உயர் கலைக்கூறு II பயிற்சி, முல்லைத்தீவு, வற்றாப் பளை மகாவித்தியாலயத்தில் நாளை பிற்பகல் 2.00மணியில் இருந்து பி.ப.6.00 மணி வரையும் வதிவிடப் பயிற்சியாக நடைபெற விருக்கின்றது.

இப்பயிற்சியில் பின்வரும் இடங்களில் கலைக்கூறு I பயிற்சி பெற்று, தொடர்ந்து கலைக்கூறு II பயிற்சி பெறாதவர்கள் கலந்து கொள்ளலாம்.

1) 6ஆம் மாதம் 2002இல்- திருநெல்வேலி கமத்தொழில் பாடசாலை, கமத் தொழில் நிலையம் (இரண்டு பிரிவும்)

2) 7ஆம் மாதம் 2002இல் வட்டக்கச்சி மகாவித்தியாலயம் (இரண்டு பிரிவும்)

3) 9ஆம் மாதம் 2003இல் கைதடி நவீல்ட் பாடசாலை (இரண்டு பிரிவும்)

4) 2ஆம் மாதம் 2003இல் உடையார்கட்டு மகாவித்தியாலயம் (இரண்டு பிரிவும்)

5) 2ஆம் மாதம் 2004இல்- முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி- (இரண்டுபிரிவும்)

மேற்படி கலைக்கூறு I பயிற்சி பெற்றவர்கள். ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில், தற்போது சேர்ந்திருப்பவர்களும் தவறாது பங்குபற்றும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# மைதானம் திறப்பு

(ஒட்டுசுட்டான்)

சிறுவர் தினத்தை முன்னிட்டு கடந்த முதலாம் திகதி சிறுவர்களுக்கான விளையாட்டு மைதானம் திறக்கப்பட்டுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிறுவன ஆதரவுடன் முல்லை அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினால் இது அமைக்கப்பட்டுள்ளது..

இந்நிகழ்வு இளநிலா முன்பள்ளி ஆசிரியர் தலைமையில் நடைபெற்றது. முல்லைஅகதிகள் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் தெ.சஞ்சீவன் நாடாவினை வெட்டி மைதானத்தைத் திறந்துவைத்தார். (05)

# பனம் விதை நடுகை

(வவுனியா)

தியாகி திலீபனின் 17ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு வவுனியா மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் பிரதேச ரீதியாக பனம்விதை நடுகை ஆரம்பிக் கப்பட்டது. இந்த வகையில் நெடுங்கேணிப் பிரதேசத்தில் பாடசாலை மாணவர்களையும் இணைத்து 500 விதைகளும் கனகராயன் குளம் பிரதேசத்தில் புதூர்ச்சந்தி, பொதுக்காணியில் 1000 விதைகளும், வவுனியா நகரப்பிரதேசத்தில் கல்மடு கிராமத்தில் 500 விதைகளும், மரக் காரம்பளை வீதியோரத்தில் 300 விதைகளும் நடுகை செய் யப்பட்டன.

இவ்வகையில் உண்ணா நோன்பு ஆரம்பித்த நாள் மற்றும் இறுதி நாளின்போதுமாக வவு னியா மாவட்டத்தில் 2300 விதை கள் நடுகை செய்யப்பட்டதுடன் இச்செயற்பாடு இவ்வருடம் முடியும் வரை தொடர்ச்சியாக செயற்படுத்துவதற்கு சகல ஒழுங் குகளும் செய்யப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறு வனத்தின் செய்திக்குறிப்புத் தெரி விக்கின்றது.

# மனைவியைக் கத்தியால் வெட்டிய கணவன் அரசியல் துறையினரிடம்

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் காதலியார் சம் மளங்குளம் எனும் இடத்தில் மனை வியைக் கணவன் கத்தியால் வெட்டி படுகாயப்படுத்தியுள்ளார்.

இச்சம்பவம் கடந்த திங்கட் கிழமை இரவு இடம் பெற்றுள்ளது மது போதையில் வந்த கணவன் மனைவியுடம் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டதுடன்,கத்தியாலும் வெட்டி காயப்படுத்தினார். இதையடுத்து மனைவி கத்தியதும் அயலவர்க ளால் இவர் பிடிக்கப்பட்டு உடனடி யாக அரசியல் துறை செயலகத் திற்கு அனுப்பப்பட்டதுடன் மனைவி புதுக்குடியிருப்பு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

காதலியார் சம்மளங் குளத் தைச் சேர்ந்த ஜெயந்திரன் என்ப வரே இச் சம்பவத்தில் ஈடுபட் டுள்ளார். (05)

# நல்லினக் கால்நடைகளைப் பெறவிரும்புவோர் தொடர்புகொள்ளக் கோரிக்கை

கால்நடை வளர்ப்போரின் நன் மைகருதியும் எமது பிரதேசத்தில் நல்லினக் கால்நடைகளை அபி விருத்தி செய்யும் நோக்கிலும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களமும் இணைந்து பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்த வகையில் கால் நடைகளின் தரத்தை உயர்த்துவதற் காக நல்லினக் காளைகளை 50% மானிய அடிப்படையில் வழங்க நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தேசிய கால்நடை அபிவிருத்தி நிறுவனம் மூலமாக இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதால் நல்லினக் கால்நடைகளைப் பெற விரும்புவோர் வவுனியா மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்துடனும் கால்நடை வைத்தியர் அலுவலகத்துடனும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள் ளுமாறு வவுனியா மாவட்ட தமி ழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறு வன செய்திக் குறிப்பு தெரிவிக் கின்றது.

# ஆடு,மாடுகளுக்கு தடுப்பூசி ஏற்றல்

வவுனியா மாவட்டத்தில் சேம மடு, நெடுங்கேணிப் பிரதேசங்க ளில் உள்ள கால் நடைகளுக்கு கால்வாய் நோய், தொண்டைய டைப்பான் போன்ற நோய்களுக்கு தடுப்பூசி போடப்பட்டதுடன் நல்லின ஆடுகளுக்கான ஏற்பூசியும் போடப் பட்டது.

இது வவுனியா மாவட்ட தமி ழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறு வனத்தின் ஒழுங்குபடுத்தலின் கீழ் வவுனியா வடக்கு கால் நடை மாடுகளுக்கு கால்வாய் நோய்க ளுக்கான தடுப்பூசியும் 1200 மாடுகளுக்கு தொண்டையடைப் பான் நோய்களுக்கான தடுப்பூசி யும் 280 ஆடுகளுக்கு ஏற்புத் தடுப் பூசியும் போடப்பட்டது குறிப்பிடத் தக்கதாகும். மேற்படி தடுப்பூசி போடும் நடவடிக்கை தொடர்ச் சியாக செயற்படுத்துவதற்கு நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறு வனத்தின் செய்திக் குறிப்புத் தெரி விக்கின்றது.

# 220 ஆயுர்வேத வைத்தியர்களுக்கு நியமனம் வழங்க அரசு முடிவு

(கொழும்பு)

இலங்கையில் இன்னும் ஒருமாத கால இடைவெளியில் 220 ஆயுர் வேத வைத்தியர்களுக்கு நியமனம் வழங்கவிருப்பதாக சுதேச வைத்தி யத்துறை அமைச்சர் கரலியத்த உறுதி அழித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாதம்பையில் நடைபெற்ற ஆயுர்வேத வைத் தியசாலை ஒன்றின் திறப்புவிழா நிகழ்வில் கலந்துகொண்டு உரை யாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் அனைத்துப்பகுதிகளிலும் ஆயுர்வேத வெற்றிடங்கள் நிரப்பப்படவிருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய பிரதமர் ராஜபக்ஷ நாட்டின் அனைத்து வைத்தியசாலையிலும் ஆயுர்வேத வைத்திய முறையை அறிமுகப் படுத்துவதுடன் ஆயுர்வேத வைத்தியர்களுக்கு ஏனைய வைத்தி யர்களுக்குரிய தகுதியை வழங்கவும் அரசு தீர்மானித்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (32)

# கால்நடைகளைக் கட்டுப்படுத்த த.பொ.மே. நிறுவனம் கோரிக்கை

தற்போது காலபோக செய்கை ஆரம்பித்துள்ளதால் சகல கால்நடை வளர்ப்போரும் தங்கள் கால்நடைகளை உரியமுறையில் பராமரித்துக் கட்டுப்படுத்தி வளர்க்குமாறும், பயிர்ச்செய்கைக்கு எந்த இடையூறும் விளைவிக்காத வகையில் கால்நடைகளைப் பராமரிக்குமாறும் வவுனியா மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கேட்டுக்கொள்கிறது.

மேலும், இரவு நேரங்களில் பலரது கால்நடைகள் வீதிகளிலும் பொதுக்கட்டடங்களிலும் நின்று பல இடையூறுகள் விளைவிப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. எனவே கால்நடைகளை உரியமுறையில் இரவில் பட்டிகளில் அடைத்துப்பராமரிக்குமாறு கேட்டுக்கொள்வதுடன் தவறும் பட்சத்தில் கால்நடைகள் பிடிக்கப்பட்டு தண்டப்பணம் அறவிடப்படும் என்றும் த.பொ.மே. நிறுவனம் அறிவித்துள்ளது.

# செயற்கைமுறைச் சினைப்படுத்தல் வவு.மாவட்டத்திற்கும் விஸ்தரிப்பு

(வவுனியா)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டு வரும் 'காராளி' செயற்கைமுறைச் சினைப்படுத்தல் நிலையம் மூலம் பல கால்நடைகள் தரமுயர்த்தப்பட்டு வருவது அனைவரும் அறிந்ததே. தற்போது இத்திட்டம் வவுனியா மாவட்டத்திற்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் தங்கள் கால்நடைகளைத் தரமுயர்த்த விரும்புவோர் கனகராயன் குளத்தில் அமைந்துள்ள கால்நடை வைத்தியர் அலுவலகத்திடம் தொடர்புகொண்டு குறித்த சேவையைப் பெற்றுக்கொள்ளுமாறு வவுனியா மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனச் செய்திக்குறிப்பு தெரிவிக்கின்றது.

# முள்ளியவளை தமிழ்.வித்தியாலய மாணவர்களின் கண்காட்சி நிகழ்வு

(முள்ளியவளை)

முள்ளியவளை தமிழ் வித்தியாலய கனிஷ்ட இடைப்பிரிவு மாணவர்களின் கண்காட்சி நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

மேற்படி நிகழ்வின் ஆரம்பத்தில் பொதுச்சுடரினை தமிழ் வித்தியாலய அபிவிருத்திச் சங்க செயலாளர் நா.சந்திராதரன் பொதுச்சுடரினை ஏற்றிவைக்க மாவீரர் கப்டன் உத்தமனின் சகோதரனும் பாடசாலை ஆசிரியருமான பொ.கேதீஸ்வரன் தமிழீழ தேசியக்கொடியினை ஏற்றிவைத்ததையடுத்து பாடசாலைக்கொடியினை பாடசாலை முதல்வர் சு.வீரசிங்கம் ஏற்றிவைத்தார். மங்கல விளக்கினை முல்லை வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி செ.முனீஸ்வரன் ஏற்றிவைத்துக் கண்காட்சி மண்டபத்தினைச் சம்பிரதாய பூர்வமாக நாடாவினை வெட்டித் திறந்து வைத்ததையடுத்து மாணவர்கள், ஆசிரியர்கள் பெற்றோர்கள் நலன்விரும்பிகள், பொதுமக்கள் மு/கலைமகள் வித்தியாலய மாணவ,மாணவிகள் மற்றும் முல்லை வலயக் கல்வித்திணைக்கள ஆசிரிய ஆலோசகர்கள், முல்லை வலயக் கல்வித்திணைக்களப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் நா.தியாகராசா மற்றும் அயல்பாடசாலை ஆசிரியர்கள் எனப்பெருமளவானோர் பார்வையிட்டனர். (ஆ)

# போரினால் பாதிக்கப்பட்டோருக்கு உதவ நலிவுற்றோர் நலவாழ்வுத்திட்டம் ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

போர்அனர்த்தங்களால் பாதிக் கப்பட்டவர்களுக்கு உதவும் முக மாக சமுதாயமுன்னேற்ற நிலையத் தால் அறிமுகம் செய்து வைக்கப் பட்ட நலிவுற்றோர் நலவாழ்வுத் திட்டத்திற்கு உதவுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் மீது சிங்களப் படைகளால் மேற்கொள்ளப்பட்டு வந்தபோர் காரணமாக நேரடி யாகப்பாதிக்கப்பட்ட முதியவர்கள், ஊனமுற்றவர்கள், குழந்தைகள், உழைப்போரை இழந்த குடும் பங்கள், கணவரை இழந்தோர்கள், தபுதாரர்கள் போன்றோரை வாழ் வில் சகல துறைகளிலும் மேம்பட்ட வர்களாக உயர்த்துவதற்கு இவ் வாறு நலிவுற்றோர் நலவாழ்வுத் திட்டத்தின் உண்டியல் திட்டம் மூலம் பெறப்படும் நிதியை பயன் படுத்துவதாக சமுதாய முன்னேற்ற நிலையம் செயற்பட்டு வருகிறது. எனவே இதன் செயற்பாட்டுக்கு அனைவரும் தமது ஒத்துழைப்பை வழங்குமாறும் அந்த நிறுவனம் கேட்டுள்ளது.

இந்நிறுவனம் அன்புச்சோலை முதாளர்பேணலகம் தொழில்சார் பயிற்சிகள் வழங்குதல், ஊனமுற் றோருக்கு உதவுதல், வறியகுடும் பங்களுக்கு மாதாந்தக் கொடுப்பன வுகளை வழங்குதல் போன்ற திட் டங்களை நடைமுறைப்படுத்தி வரு கின்றமை குறிப்பிடத்தக்கது.(லோ)

# வெடிமருந்துடன் கைதான இந்திய மீனவருக்கு 22ஆம் திகதிவரை விளக்க மறியல்

காங்கேசன்துறை கடற் பகுதியில் அண்மையில் வெடிப்பொருட்களுடன் கைது செய்யப்பட்ட 10 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதவான் உத்தரவிட்டார். திங்கட்கிழமை இரவு இவர்கள் 10 பேரும் காங்கேசன் துறை பொலிசாரால் நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்கள் ஜெலிக்னைட் உட்பட்ட பெருமளவு வெடிப்பொருட் களுடன் கச்சதீவு கடற்பகுதியில் வைத்து சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். அத்துடன் இவர்கள் பயணித்த படகும் கைப்பற்றப்பட்டது. தமிழ் நாட்டைச் சேர்ந்த இவர்கள் அனைவரும் இந்தியாவின் ஒரு பிரதேசத்தில் இருந்து மற்றும் ஒரு பிரதேசத்திற்கு கொண்டு சென்றதாக விசாரணையின் போது தெரிவித்துள்ளனர்.

# மிதிவெடியில் காலிழப்பு

(யாழ்ப்பாணம்)

தொழில் செய்வதற்காக சென்ற சீவல் தொழிலாளி ஒருவர் மிதி வெடியில் சிக்கி தனது இடது காலை இழந்துள்ளார். கடந்த திங்கட்கிழமை முற்பகல் சுழிபுரம் திருவடி நிலை எனும் இடத்தில் நடைபெற்ற இச் சம்பவத்தில் அதே ஊரைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையாரான வீ.மணிகண்டன் (வயது 30) என்பவரே தன் காலை இழந்தவராவார்.

மேற்படி நபர் தனது தொழிலுக்கு உகந்த பனை மரங்களைத் தெரிவு செய்வதற்காக வெறும் காணிஒன்றினுள் பிரவேசித்த போதே அங்கு இராணுவத்தினரால் புதைத்து வைக்கப் பட்டிருந்த மிதி வெடியில் சிக்கியுள்ளார். (33)

# இந்தியப் படையினரால் கொல்லப்பட்ட பொதுமக்களின் நினைவு நிகழ்வு

## -கொக்குவிலில் நேற்று நடைபெற்றது

(யாழ்ப்பாணம்)

1987 ஆம் ஆண்டு 10ஆம் மாதம் 12 ஆம் 13ஆம் திகதிகளில் இந்திய இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட 40இற்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்களின் நினைவு தின நிகழ்வுகள் நேற்றுக் காலை 9.00 மணியளவில் கொக்குவில் பிரம்படி வீதியில் அமைந் துள்ள நினைவுச் சிலைக்கு அருகாமையில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத்தலைவர் பகீரதன் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வின் முதல் நிகழ்வாக பொதுச் சுடரினை யாழ். மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் கலைவிழி, பிரம்படிலேன் சன சமூக நிலையத் தலைவர் செல்வராசா யாழ். நல்லூர் கோட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் செழியன் யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் சிவகரன்,தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றிய செயலாளர் கஜேந்திரன் ஆகியோர் ஏற்றி வைத்தனர். அதனைத் தொடர்ந்து படுகொலை செய்யப்பட்ட 40இற்கும் மேற்பட்ட பொது மக்களின் நினைவாக ஈகச் சுடர்களினை அவரது உறவினர்கள், பாடசாலை மாணவர்கள் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். அதனைத் தொடர்ந்து நினைவுத் தூபிக்கான மலர் மாலையை யாழ். மாவட்ட துணை அரசியல் துறைப்பொறுப்பாளர் செம்மணன், தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் குலேந்திரன், தேசிய எழுச்சிப் பேரவை சிவராசா, யாழ். நல்லூர் கோட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் பூமகள் ,யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவ ஒன்றியத் தலைவர் செல்வக்குமார் ஆகியோர் அணிவித்தனர். அதனைத் தொடர்ந்து நினைவுத் தூபிகளுக்கு மலர் அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து நினைவுரையை கொக்குவில் இராமகிருஷ்ணன் பாடசாலை அதிபர் சிவபாலசேகரம் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான திருமதி பத்மினி சிதம்பரநாதன், கஜேந்திரன், யாழ். மாவட்டத்துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் செம்மணன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந் நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பல்கலைக் கழக மாணவர்கள், தொழில்நுடபக்கல்லூரி மாணவர்கள் பொது மக்கள் எனப் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர். (36)

# யுத்த அனர்த்தத்தால் ஐயாயிரம் மில்லியன் ரூபா யாழ். மாவட்ட மீனவர்களுக்கு சொத்திழப்பு

(யாழ்ப்பாணம்)

**கடந்த 20 வருடகால யுத்த அனர்த்தங்களினால் யாழ். மாவட்ட மீனவர்கள் சுமார் ஐயாயிரம் மில்லியன் ரூபா சொத்துக்கள் மற்றும் உடமைகளை இழந்துள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக படகுகள், கட்டுமரங்கள் மற்றும் வெளியிணைப்பு இயந்திரங்கள் பொருத்தப்பட்ட வள்ளங்கள் என மீன்பிடி உபகரணங்கள் அழிவினால் சுமார் மூவாயிரத்து முந்நூற்று எண்பது (3380) மில்லியன் ரூபா சொத்திழப்பு ஏற்பட்டுள்ளது.**

அதேவேளை மீனவர்களது வீடுகள் மற்றும் ஐஸ்கட்டித் தொழிற்சாலைகள், ஓய்வு மண்டபங்கள் சமூக அபிவிருத்தி நிலையங்கள், படகுதரிப்பிடங்கள் உள்ளிட்ட நிலையான சொத்து அழிவுகளால் ஆயிரத்து 698 மில்லியன் ரூபா சொத்திழப்பு ஏற்பட்டுள்ளமையும் கணிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்தகால யுத்த அனர்த்தங்களினால் வெளியிணைப்பு இயந்திரங்கள் பொருத்தப்பட்ட 305 வள்ளங்களும், ஆயிரத்து 262 கட்டு மரங்களும் அழிக்கப்பட்டுள்ளன. அதேபோன்று வெளியிணைப்பு இயந்திரங்கள் அற்ற இரண்டாயிரத்து 135 வள்ளங்களும், ஆயிரத்து 708 கட்டு மரங்களும் யுத்தத்தினால் அழிந்துள்ளன.

இவற்றினைவிட ஆழ்கடல் மீன்பிடி இழுவைப்படகுகள் மட்டும் சுமார் 569 அழிக்கப்பட்டிருப்பதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. குறிப்பாக வடமராட்சி வடக்கின் பருத்தித்துறைப்பகுதியில் சொத்து மற்றும் உடமைகள் இழப்பினால் ஆயிரத்து 118 மில்லியன் ரூபாய் இழப்பும், யாழ்.நகர மீனவர்களிற்கு ஆயிரத்து 341மில்லியன் ரூபாய் இழப்பும் ஏற்பட்டுள்ளது.

அதேபோன்று வடமராட்சி கிழக்கு மீனவக்குடும்பங்களிற்கு 663 மில்லியன் ரூபாவினையும் உயர்பாதுகாப்பு வலயம் காரணமாக படையினரால் ஆக்கிரமிப்பிற்கு உள்ளாகியிருக்கும் காங்கேசன்துறைப் பகுதியைச்சேர்ந்த மீனவகுடும்பங்களிற்கு 685 மில்லியன் ரூபாய் சொத்திழப்பு ஏற்பட்டுள்ளது.

இதனிடையே மீன்பிடி மற்றும் கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சு கடந்த கால யுத்த அனர்த்தங்களால் சொத்தி ழப்பிற்குள்ளான மீனவர்களது படகுகள் மற்றும் வள்ளங்கள், உபகரணங்களிற்கான நஷ்ட ஈட்டின் ஒருபகுதியை மட்டும் வழங்க தற்போது முன்வந்திருப்பதாக கடற்றொழில் நீரியல் வளத்துறை யாழ்.அலுவலக வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன. (27)

# சுகாதாரக் கருத்தரங்கு

யாழ். தீவகத்தின் ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் சுகாதார நிலைமைகளை மேம்படுத்துவதற்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. அந்த அடிப்படையில் அப்பகுதி மக்களுக்கு சுகாதாரக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன. (33)

# மின்இணைப்பை விரைவாக வழங்க நடவடிக்கை வேண்டும்!

(யாழ்ப்பாணம்)

யாழ். ஊர்காவல்துறையில் மின்சாரம் வழங்கப்படாத பிரதேசங்களுக்கான மின்இணைப்புக்களை வழங்குவதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளபோதும் இலங்கை மின்சாரசபையினால் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

ஊர்காவற்துறைப் பகுதியில் உள்ள பல இடங்களுக்கும் மின் இணைப்புகள் வழங்கப்படாததினால் அப்பகுதிகளில் வாழும், மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனினும் இது குறித்து மின்சாரசபையினர் தொடர்ந்தும் அலட்சியப் போக்கைக்காட்டி வருவதையிட்டு அப்பகுதி மக்களால் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

# குடாநாட்டில் பாடசாலை கட்டட நிர்மாணத்திற்கு உதவி

(வடமராட்சி)

யாழ்.குடாநாட்டில் 15மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மேலும் சில பாடசாலைகளில் கட்டடத்தொகுதிகளை அமைத்து வழங்க நிகொட் அமைப்பு முன்வந்துள்ளது. தென்மராட்சியின் மட்டுவில் வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இரண்டு மாடிக் கட்டடமொன்றை அமைத்து வழங்க 4.2 மில்லியன் ரூபாவினையும், தொண்டமனாறு வீரகத்தி பிள்ளை வித்தியாலயத்தில் மாடிக்கட்டடம் மற்றும் மண்டப திருத்தங்களை மேற்கொள்ள 5.4 மில்லியன் ரூபா நிதியினையும் ஒதுக்கியுள்ளது.

அதேபோன்று கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரியில் இரண்டு மாடிக் கட்டட நிர்மாணம் மற்றும் நூலக அமைப்புப்பணிகளுக்கென 5.2மில்லியன் ரூபாவையும் நிகொட் ஒதுக்கியுள்ளது. (27)

# காணாமல் போனோர் குறித்த ஆட்கொணர்வு மனுக்கள் சாவகச்சேரி நீதிமன்றுக்கு மாற்றம்

## ஆட்சேபம் தெரிவிக்க கால அவகாசம்

(வடமராட்சி)

1996/97ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போனோர் சார்பில் யாழ்.மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்கொணர்வு மனுக்களில் மேலும் ஆறு ஆட்கொணர்வு மனுக்கள் ஆரம்பகட்ட விசாரணைக்காக சாவகச்சேரி நீதிமன்றிற்கு மாற்றப்பட்டுள்ளது.

யாழ்.மேல் நீதிமன்ற நீதவான் கே.பி.எஸ்.வரதராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் இவ் ஆட்கொணர்வு மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளையிலேயே ஆரம்பகட்ட விசாரணைகளை மேற்கொள்வதற்கான வழக்குகளை சாவகச்சேரி நீதிமன்றிற்கு மாற்றுவதற்கான உத்தரவை அவர் பிறப்பித்திருந்தார்.

அத்துடன் குற்றஞ்சாட்டப்பட்ட படையினரான எதிர் மனுதாரர்கள் தமது ஆட்சேபனைகளைத் தெரிவிக்க எதிர்வரும் 18ஆம் திகதி வரையும் கால அவகாசம் வழங்கியும் அவர் தீர்ப்பளித்துள்ளார்.

இதனிடையே யாழ். நகரின் குருநகர் மற்றும் அரியாலைப் பகுதிகளில் குறித்த காலப்பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போன மூன்று இளைஞர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனுக்கள் மீதான ஆரம்ப கட்ட விசாரணைகள் யாழ் நீதிமன்றில் நேற்று முன்தினம் இடம் பெற்றிருந்தது.

நீதவான் இ.த.விக்கினராஜா முன்னிலையில் இடம் பெற்ற இவ் விசாரணைகளில் மனுதாரர் சார்பில் மனித உரிமைகளுக்கான சட்டத்தரணி எம்.ரெமீடியஸ், அ.விநாயகமூர்த்தி ஆகியோரும் எதிர் மனுதாரரான படையினரின் சார்பில் சட்டத்தரணி கப்டன் குறூப் மற்றும் தென்னிலங்கை சட்டத்தரணியொருவரும் ஆஜராகி இருந்தனர்.

இதேவேளை எதிர் மனுதாரர்கள் சார்பில் ஆஜரான இராணுவ சட்டத்தரணிகள் மனுதாரர்களை குறுக்கு விசாரணை செய்தனர்.

இதனிடையே மனுதாரர்களால் தமது பிள்ளைகள் காணாமல் போனமை தொடர்பில் யாழ். பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாடுகளது பதிவேடுகளை நீதிமன்றில் சமர்ப்பிக்க உத்தரவிட்ட நீதவான் விசாரணைகளை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 7ஆம் திகதிக்கு ஒத்திவைத்து தீர்ப்பளித்துள்ளார். (27)

# நோர்வே,தென்கொரிய தூதரக அதிகாரிகள் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஆராய்வு

நோர்வே நாட்டின் இலங்கைக்கான தூதரகத்தின் 2 ஆவது செயலாளர் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் யாழ்.குடாநாட்டிற்கு விஜயம் செய்துள்ளனர்.

நோர்வே நாட்டின் நிதியுதவியுடன் நொறாட் அமைப்பினாலும், நியாப் அமைப்பினாலும் யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித்திட்டங்கள் குறித்து ஆராய்வதற்காக யாழ். வந்த இவர்கள்,

யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன், திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடியதுடன், நோர்வேயின் நிதியுதவியுடன் குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களையும் பார்வையிட்டுள்ளனர்.

இதேவேளை தென்கொரியாவின் இலங்கைக்கான தூதரகத்தின் வதிவிடப்பிரதிநிதி இம் பைங்குபைன் தலைமையிலான 4 தென்கொரிய தொழில் நுட்ப நிபுணர்கள் அடங்கிய குழு ஒன்றும் நேற்று முன்தினம் யாழ்.குடாநாட்டிற்கு விஜயம் செய்துள்ளது.

யாழ்.குடாநாட்டில் தொழில் நுட்பக்கல்வியை விருத்தி செய்வதன்மூலம் யாழ்.குடாநாட்டில் தொழில் நுட்ப அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கான விடயங்கள் குறித்து நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக யாழ்.வந்த இவர்கள் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரிக்குச் சென்று அங்கு இயந்திரத் தொழில் நுட்பம், தகவல் தொழில் நுட்பம் போன்றவற்றை விருத்தி செய்வதற்கான சாத்தியங்கள் குறித்து ஆராய்ந்துள்ளனர். (33)

# உடல், மன ஆரோக்கியத்திற்கு உறுதுணையாக விளங்கும் யோகக்கலை

...பிரதீபன்...

இயந்திர மயமாகிக்கொண்டு போகும் இக்காலத்தில் மறைந்து போகும். தமிழ் மரபுக்கலைகளில் ஒன்றான யோகாசனப் பயிற்சி நெறி குறித்து யோகாசன பயிற்சி ஆசிரியரும் பிரபல கராத்தே ஆசிரியருமான திரு.ரட்ணசோதி அவர்களுடனான நேர் காணலின்போது.

*** இந்த யோகாசனத்தின் ஆரம்பம் அதாவது தொடக்கநிலை எவ்வாறு இருந்தது?**

உலகத்தின் யோகப் பயிற்சி என்று பார்க்கின்ற போது யோகப்பயிற்சி, உலகம் தொடங்கியகாலம் தொடக்கம், உலகத்தில் கோடான கோடி ஜீவராசிகள் தோன்றியதிலிருந்து பழகிக்கொண்டிருக்கின்றன. அல்லது நடைமுறைப் பாவனைகள் பழக்கவழக்கங்களை ஒழுங்கு படுத்திக் கொண்டிருக்கின்றன. இந்த வகையில் ஆதியில் வாழ்ந்த ஞானிகள், யோகிகள், ரிஷிகள்-இவர்களை மெய் ஞானிகள் என்று சொல்வது உண்டு. இந்த மெய் ஞானிகள் மனிதனின் ஆரோக்கிய வாழ்விற்கு எது அவசியம்? எப்படி இருந்தால் மனிதன் ஆரோக்கியமாக வாழமுடியும் என்பதை அறிவதை அவர்கள் குறிக்கோளாக கொண்டிருந்தார்கள். நோய்க்காரர்கள் இல்லாமல் அவர்கள் ஆரோக்கியமாக இருந்தபடியால் மனிதனுடைய வாழ்விற்கு எது அவசியம் என்று ஆராய்ச்சி செய்தார்கள். ஆராய்ச்சி செய்தார்கள் என்று சொல்வதை விட அவர்களுக்கு ஒரு அருள் நிலையால் அவர்கள் மனதில் தோன்றியது என்று வரலாறுகள் சொல்லிக் கொண்டு வருகின்றன.

அந்த வகையில் பார்க்கின்ற போது மரம் இருக்கிறது. மலை இருக்கின்றது. காற்று வீசுகின்றது. இடையில் இருக்கின்ற மிருகங்கள் ஜீவராசிகளைப் பார்க்கின்ற பொழுது சாதாரணமாக பாம்பினது நிலை, முதலையினது நிலை, வெட்டுக்கிளியினது நிலை அம்பு வில்லினது நிலை. எல்லாவற றையும் அவர்கள் பார்க்கிறார்கள். பார்த்து விட்டு இவ்வகை மனிதனுக்கு எந்த வகையில் பிரயோசனப்படுமென்று அவர்கள் யோசிககின்றனர். அந்த யோசனையின் பிற்பாடுதான் இந்த யோகப் பயிற்சியைக் கண்டு பிடித்து அதனை நடைமுறைப் படுத்திக்கொண்டு வந்தார்கள்.

ஆதிகாலத்தில் வாழ்ந்தவர்கள் உலகத்தில் எத்தனை கோடான கோடி ஜீவராசிகள் இருக்கின்றனவோ அத்தனை வகையான நிலைகள் இருக்கின்றன. நிலைகள் எனபது ஆங்கிலத்தில் பொசிசன் என்று சொலலபபடுகின்றது. இந்த நிலைகளை அவர்கள் கண்டு பிடித்து எங்களுக்கு எது எப்போது தேவை? இந்த மனிதனுடைய வாழ்க்கைக்கு எவ்வளவு தேவை? என்பது பற்றி கிட்டத்தட்ட 6000-7000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த பதஞ்சாலி என்ற முனிவரால் வழங்கப்பட்டது. இவர் திருக்குறள் மாதிரி இன்னும் யோக வரிவடிவங்களைக் கொண்ட சூத்திரங்களை மனிதனுடைய நல்வாழ்வுக்காக கொடுத்தார்.

இந்தப்பதஞ்சாலி முனிவரது வாக்கியங்களைக் கொண்ட யோகப்பயிற்சிகளைத் தான் இன்று வரைக்கும் நாங்கள் செய்து வருகிறோம். இவர்களை மெய்ஞானிகள் என்று சொல்வது உண்டு.இன்று விஞ்ஞானத்தில் உள்ள கண்டுபிடிப்புக்கள் கூட காலத்திற்குக் காலம் மாறுபட்டுக் கொண்டே போகிறது. உதாரணமாக நாங்கள் ஏறத்தாள ஐந்து வருடங்களிற்கு முன் எடுத்துக் கொண்ட மருந்து வில்லைகளை எல்லாம் அதாவது விஞ்ஞான பரிசோதனைகள் மூலம் கண்டு பிடிக்கப்பட்ட சில மருந்து வில்லைகளை இன்று அதைப் பாவிக்க வேண்டாம் என்று சொல்வார்கள். அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்கிறார்கள். அதேமாதிரி உடற்பயிற்சிகளைப் போல சில காலத்திற்கு முன் செய்த பயிற்சிகளை இன்றைய நிலையில் செய்யக் கூடாது என்று சொல்கிறார்கள். இவற்றைச் செய்தால் பல பின்விளைவுகளை எதிர்நோக்கலாம். ஆனால் இந்த யோகப் பயிற்சி 6000-7000 ஆண்டுகளுக்கு முன் கண்டுபிடிக்கப்பட்டது.

*** இந்த யோகப் பயிற்சி இன்று வரைக்கும் எந்தளவுக்கு வெற்றிகரமானதாக கொள்ளப்பட்டது. இந்தப் பயிற்சி இன்றைய இளம் சமூகத்தினரிடையே எந்தளவுக்கு நம்பப்படுகின்றது?**

இந்த யோகப்பயிற்சி இன்று வரைக்கும் வளர்ந்துகொண்டிருக்கிறது. அதனை ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறார்கள். இதனால் மனிதனுக்கு என்னென்ன நன்மைகள் ஏற்படுகிறது என்று சொல்லிக் கொண்டே போகலாம். ஒருகுழந்தை அன்னையின் கருப்பையில் இருக்கின்றது என்பதிலிருந்து அந்தக் குழந்தையினுடைய வளர்ச்சி அதன் இறப்பு வரைக்கும் ஒவ்வொரு நிலையும் யோகநிலையாகத் தான் கருதுகிறார்கள். ஒரு அன்னையின் வயிற்றிலே குழந்தை இருக்கின்றபோது "கர்ப்பாசனம்" என்ற நிலையிலேயே இருக்கின்றது. அதன் பின் அந்தப்பிள்ளை வெளியே வந்து பிறகு அந்தப் பிள்ளை அம்மாவிடம் பால்குடித்துவிட்டு சும்மா இருக்கவில்லை. கால்களைக் கைகளை ஆட்டி தனக்கொரு உடற் பயிற்சி செய்து கொண்டு அதன்பிறகு குப்புறப் படுக்கின்றது. பின்குப்புற நிலையிலிருந்து மெதுவாகக் கைகளை ஊன்றி எழும்புகின்றது. அப்படியான முயற் சியை சொல்வது "புயங்காசனம்" என்று. புயங்கம் என்றால் பாம்பு, பாம்பு நிற்கும் நிலையை பிள்ளை ஏற்படுத்துகின்றது. அதன் பின்பு அப்பிள்ளையின் வயிறு நசுக்கப் படுகின்றது. அந்த நேரம் தான் பிள்ளைக்கு சத்தி போன்ற உபாதைகள் வருவது. வயிறு நசுக்கப் படுகின்ற காலங்களில் அந்த வயிற்றைத்தான் "தனுராசனம்" என்று கூறுகின்றார்கள். தனு என்பது வில்லு. வில்லு போன்ற அமைப்பை வயிறு ஏற்படுத்துகின்றது.



இவற்றினால் வயிற்றிலுள்ள உள் உறுப்புக்கள் யாவும் பலம் பெற்று இரத் தோட்டம்சீராகி வ்ரககூடிய நோயகளைக குணப்படுத்தி சரியாகச் சமிபாட்டுத் தொகுதிகள் உள்ளிருக்கும் உடல் உறுப்புக்கள் சுரக்கக்கூடிய தன்மையை ஏற்படுத்துகின்றது. அதற்குப் பிறகும் அந்தப் பிள்ளை தவழ்கின்ற நிலை, கைகளை ஊன்றாமல் எழும்புகின்ற நிலை எல்லாமே யோகப் பயிற்சியிலே வரும் யோகத்தின் நிலையிலேயே வளர்ந்து கொண்டு போவதாகக் கருதி மனிதன் இறுதியில் வந்து மண்ணுக்குள் போகும் வரை நிகழ்கின்ற செயற்பாடுகள் யாவும் யோக நிலையிலேயே வளர்ந்து செல்கின்றது.

*** இந்த யோக நிலையில் முக்கியமாக நாம் கற்க வேண்டியவை எவை?**

ஆதி காலத்தில் இருந்து நாம் பார்க்க வேண்டியது என்னவென்றால்,இந்த யோகிகள், ஞானிகள் எல்லாம் இந்த யோகப் பயிற்சி நெறிகளைத் தமக்கு ஏற்ற வகையில் வகுத்திருக்கிறார்கள். அதாவது குழந்தைகளுக்கு ஏற்ற வகையில் இரண்டு பருவங்களாகக் கருதுகிறார்கள். பருவம் அடைவதற்கு முன், பருவம் அடைதலின் பின் என்று வகைப்படுத்தியுள்ளார்கள். எல்லாப் பயிற்சிகளையும் எல்லோரும் செய்ய முடியாது. வயது முதிர்ந்தவர்கள், இடைநிலையில் உள்ளவர்கள், குழந்தைகள் அதற்கு இடைப்பட்டவர்கள். இவர்கள் ஒவ்வொருவருக்கும் பயிற்சிகளை வகுத்திருக்கிறார்கள். அவர்களின் தராதரத்திற்கு ஏற்ற வகையில் வேலைப்பழுவிற்கு ஏற்ற வகையில் கல்வி கற்பவர்களுக்கு, வேலையில் உள்ளவர்களுக்கு, அதற்கு ஏற்ற பயிற்சிகள் மூளையின் சிறப்பைக் கொண்டு ஆற்றல் செய்பவர்களுக்கு, விளையாட்டுத்துறைகளில் ஈடுபட்டவர்களுக்கு ஏற்ற பயிற்சிகள் என உள்ளன. இன்றைய காலத்தில் விளையாட்டுத்துறை வளர்ந்து கொண்டே போகிறது. இன்று ஓட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கு தசை நார்கள் விரிவடைகின்றது. அதற்கு யோகப் பயிற்சியில் அதற்குரிய யோகப் பயிற்சி நெறிகள் இருக்கின்றன. நாம் அதனைக் கைக் கொள்வதில்லை. என்ன நடக்கின்றது என்றால் யோகப் பயிற்சிகள் கூட வியா பாரமயப்படுத்தப்பட்டுள்ளது. என்னென்ன தேவை என்பது இல்லை. யோகப்பயிற்சி என்றால் இதுதான். யோகப்பயிற்சி ஒரு புத்தகத்தில் வருவதை, வீடியோவில் வரு வதைப் பார்த்துவிட்டு இது தான் யோகப் பயிற்சி என்று ஆசிரியர்கள் பயிற்சி கொடு க்கிறார்கள். பிழை என்று சொல்ல முடியாது. என்னவென்று சொன்னால் யோகப் பயிற்சியின் முக்கி யத்துவமே இந்த உடல், மனம், மூச்சு இது மூன்றும் இணைய வேண்டும். மனம், மூச்சு, உடல் ஆகிய மூன்றும் இணைந்து செயற்படுவதே முழுமையான பயிற்சி. இந்த முழுமையான பயிற்சியை நாங்கள் முழுமையாக் காமல் அரைகுறையாக, நாங்கள் செயதால் பயனில்லை. எண்ணங்களைவேறு இடங்களில் வைத்துக் கொண்டு உடலை மட்டும் இசையப் பண்ண முடியாது. அல்லது உடலை இசையச் செய்து கொண்டு அல்லது நாம் வேறொரு வேலையைச் செய்துகொண்டு, அல்லது சிந்தனையை வேறு இடத்தில் செலுத்திக்கொண்டு பயிற்சியைச்செய்தால் முழுமையான பலன்களை அளிக்காது.

அந்தந்த நிலையில் இருந்து அதற் கேற்ப பயிற்சிகளை நாம் செய்கின்றபோது தான் அந்த யோகப் பயிற்சியினால் எமக்கேற் படும் யோகப் பயிற்சிக்கான நன்மைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

இற்றைக்கு 6000-7000 ஆண்டுகள் முதல் வழிவழியாக வந்த இந்த யோகப்பயிற்சிகள் இன்று வரைக்கும் வெளி நாடுகளில் ஆராய்ச்சி செய்யப்படுகிறது. அதனால் சில நோய்கள் நீக்கப்படுகிறது. மனஅமைதியில்லை. மன அழுத்தம். மனக் குழப்பம் போன்றவற்றை நீக்க வேண்டிய ஒரு மார்க்கம் யோகப் பயிற்சி. யோகப் பயிற்சியில் எடுக்கப்பட வேண்டிய மூச்சுப் பயிற்சி, தியானப்பயிற்சி என்பவையே சாதகமானவை. இந்த யோகப்பயிற்சியில் எத்தனை பிரிவுகள் இருக்கின்றன என்று பார்த்தால் மனதிற்கான பயிற்சி, மூச்சிற்கான பயிற்சி, தியானத்திற்கான பயிற்சிகள், மனதை ஒருநிலைப் படுத்துவதற்கான பயிற்சிகள் இப்படியாகப் பல பயிற்சிகள் சொல்லிக்கொண்டே போகலாம். இவற்றை நாம் என்னென்ன என்று உணர்ந்துகொள்ள வேண்டும். இதனை உணர்ந்து செய்யும் போதுதான் அதனால் எமக்கு நன்மையும் கிடைக்கும். அத்தோடு புத்தகங்களைப் பார்த்து பயிற்சி செய்வது எமக்குப் பாதகமே. இப்படிப் புத்தகங்களைப் பார்க்கும் போது பெங்களூர் சுந்தரத்தின் புத்தகங்கள் மிகவும் அருமையான புத்தகங்கள். சுவாமி சிவானந்தரின் புத்தகங்களும் அருமையானவை சுவாமி சிவானந்தருடைய மாணவன் விஷ்ணு தேவானந்தனுடைய புத்தகங்கள் நிறைய இருக்கின்றன. அதிகாரமற்ற ஆசிரியர்களினால் உருவாகி வெளிவரும் புத்தகங்களில் வரும் படங்கள் பல தீமைகளை ஏற்படச் செய்கின்றன. ஆகவே சரியான புத்தகங்களைப் படிக்க வேண்டும். படிக்கின்ற மட்டுமலலாது அவற்றை ஒரு நல்ல குருவானவரிடம் விளக்கம் பெற வேண்டும். "குரு இல்லா வித்தை பாழ" என்று சொல்வார்கள் அது உண்மை ஒரு குருவைக் கொண்டு வித்தை பயிலும் போதே அந்த யோகப் பயிற்சி எங்களுக்குக் கைகொடுக்கும்.

குழந்தைகளுக்கான பயிற்சி நெறி செய்யவேண்டிய இடத்தில் குழந்தைகளுக்கான பயிற்சியை வழங்க வேண்டும் அல்லது அவர்களுக்கு பெரியவர்களுக்கான பயிற்சியை வழங்குவோமாக இருந்தால் வளர்கின்ற உறுப்புகளுக்கு கடுமையான பயிற்சியைக் கொடுத்தால் வளர்ச்சி பாதிப்படையும். அபரீதமான சுரப்புக்களைக் கொடுக்கும் அல்லது சுரப்பை இல்லாமல் செய்யும் அபரீதமான சுரப்பைக் கொடுத்தால் அவருடைய அங்கங்கள் ஆண் பெணணாகவும், பெண் ஆணாகவும் மாறும் வாய்ப்புக்கள் உண்டு. எனவே அந்தந்தக் காலத்தில் கொடுக்க வேண்டிய பயிற்சிகளைக் கொடுத்தால் தான் அதற்கான உச்சப் பயனைப் பெற முடியும்

*** இந்த யோகாசனப் பயிற்சி நெறியினூடாக இன்றைய இளைஞர், யுவதிகளுக்கு நீங்கள் யோகாசனப் பயிற்சி ஆசிரியர் என்ற முறையில் என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?**

இன்றைக்கு இருக்கக் கூடிய இளைஞர், யுவதிகள் எல்லோருக்கும் சொல்லக்கூடியது, யோகப்பயிற்சி என்று சொல்கின்ற போது, தற்காலத்தில் வெளி வருகின்ற புத்தகத்தின் அட்டைப்படத்தின் முன்னால் ஒரு தாடி வளர்த்த சாமியார் அல்லது நயப்புக்குரிய படங்கள் இப்படியான படங்களைத்தான் இன்று புத்தகங்களில் போடுகின்றார்கள். இன்றைக்கு வெளிநாடுகளில் வருகின்ற புத்தகங்களைப் பார்த்தால் அழகான உடல் வலுவைக் கொண்ட பெண்களையும், உடல் கட்டமைப்பைக் கொண்ட ஆண்களையும் எடுத்து புத்தகங்களில் அட்டைப் படங்களாகப் போட்டு செயல்முறைப் படுத்தி காட்சிப் படுத்தி வருகின்றார்கள். இதில் என்ன நன்மை ஏற்படுகிறது என்றால், உடல் கவர்ச்சி, எற்படுகிறது, உடல் கட்டமைப்பு எற்படுகின்றது இதன் பால் இளைஞர், யுவதிகள், சிறுவர்கள் எனப் பலர் ஆர்வத்துடன் பயிற்சிகளைச் செய்வதைப் பார்க்கின்றோம். பிள்ளைகள் படிப்பதற்கு மன அமைதி வேண்டும் அல்லது மூளைத் திறன் வேண்டும், சிந்தனா சக்தி வேண்டும், ஞாபகத்திறன் வேண்டும் இவற்றுக்கெல்லாம் கண்டிப்பாக யோகப் பயிற்சி ஒன்று தான்.

இன்றைய சமுதாயக் குழந்தைகள், மாணவர்கள், விளையாட்டு வீரர்கள், வயது முதிர்ந்தவர்கள், எல்லோரும் ஆரோக்கியமாக வாழ்வதற்கு மிகச் சிறந்த பயிற்சி யோகாசனம் என்று தான் சொல்ல வேண்டும். இன்றைக்கு யோகப்பயிற்சி செய்கின்ற போது வாழ்க்கை முறை கிடைக்கின்றது. நாங்கள் எப்படி ஒரு சுகதேகிகளாக வாழ வேண்டும் என்ற சிந்தனை ஆற்றலைக் கொடுக்கின்றது. நற்பண்பு கிடைக்கின்றது. எல்லோருடமும் அன்பாகப் பேசவேண்டும் என்ற ஒரு தன்மை ஏற்படு கின்றது. இந்த யோகப் பயிற்சி செய்கின்ற ஒருவரிடம் அவனுடையமனதில் அமிழ்ந்திருக்கும் ஆன்மீக சக்தி வெளிப்படுகின்றது. ஆன்மீகசக்தி தான் இன்றைக்கு உலகத்தில் அமைதியையும், சாந்தியையும் எற்படுத்துகின்ற ஒரு எழுச்சியாக விளங்குகின்றது.

நாங்கள் திடீரென அதிர்ச்சி அடையும் போது அதைத்தாங்கிக் கொள்கின்ற சக்தி கிடைக்கின்றது. உடல் உணவு இல்லாத வேளை அதை தாங்கிக் கொள்ளும் சக்தி கிடைக்கின்றது. எங்களை அறியாமலேயே உடல்சில வலிமைகளை தாங்கிக் கொள் கின்ற சக்திகளை ஏற்படுத்தும் எல்லோரும் ஆரோக்கியமாகவும், மன அமைதியுடனும் ஒருமைப்பாட்டுடனும், வாழ்வதற்கு ஒரு முழு மனிதராக வாழ்வதற்கு, நீண்ட ஆயுளுடன் இவ் உலகல் வாழ்வதற்கு, ஏற்ற ஒருபயிற்சி நெறியே இந்த யோகப்பயிற்சி நெறி. இதை நாங்கள் மறுக்க முடியாது.

# அலுவலகங்களை வினைத்திறனுடன் தொழிற்பட வைக்க யப்பானியர் கடைப்பிடிக்கும் 5 முகாமைத்துவப் படிமுறைகள்

யப்பானில் அலுவலகம், பாடசாலை, இல்லம் என்பன உயர்தரத்திலானதாகவும், உற்பத்தித் திறன் வாய்ந்ததாகவும் குறைந்தளவு நெருக்கடியானதுமாக இருக்கும் வகையில் ஒழுங்கமைப்பிற்கு $5^S$ படிநடைமுறை ஒன்று உள்ளது. இது யப்பானிய நடைமுறையாகும். இந்த 5படிமுறைகளும் S எனும் எழுத்தில் அமைவதால் இது இவ்வாறு அழைக்கப்படுகின்றது. அலுவலகங்களை உயிரோட்டமுள்ளதாக்கி அதன் சீரான செயற்பாட்டிற்கும், தொழிற்பாட்டிற்கும் இன்று யப்பானில் மட்டுமன்றி உலகில் அனைத்து நாடுகளின் அலுவலகங்களிலும் இம்முறை மிகவிருப்போடு பின்பற்றப்படுவதைக் காணக்கூடியதாகவுள்ளது. கணந்தோறும் மாறிக்கொண்டிருக்கும் உலகில், அலுவலகங்கள் மிக விரைவாகச் செயற்பட்டு ஆக்கபூர்வமான தீர்மானங்களை மேற்கொள்ளவேண்டியுள்ளது. சாதாரணமாக இல்லம் தொடக்கம் உயர்நிறுவனம் வரைக்கும் இப்படிமுறைகள் உணரப்படுகின்றன. காலம், சிக்கனம், விரைவு என்பவற்றினூடாக நிறுவனத்தை வினைத்திறனுடன் (EFFICIENCY) இயக்கி அதன் இலக்கினை (VISION / GOAL) அடைய இந்த $5^S$ படிமுறைகள் எமது நிறுவனங்களிலும், அலுவலகங்களிலும் பெரும்பயனைத்தரும் முறைகளாகக் கைக்கொள்ளப்படுகின்றது. இந்த $5^S$ முறைகளையும் பின்வருமாறு நோக்குவோம்.

| யப்பானியச் சொல் | யப்பானியச் சொல்லின் அர்த்தம் | இதற்குச் சமமான தமிழ்ச்சொல் | சமமான ஆங்கிலச்சொல் |
|---|---|---|---|
| 1.செயரி (Seiri) | அனாவசியப்பொருட்களை அகற்றுதல் | துப்புரவாக்குதல் | Sorting |
| 2.செயிரோன் (Seiton) | ஒழுங்குமுறையில் ஒழுங்கமைத்தல் | தேவையான பொருட்களை விரைவாக எடுக்கக்கூடிய வகையில் ஒழுங்கமைத்தல் | Set/systematic |
| 3.செயிசோ (Seiso) | சூழலைத் துப்புரவாக்குதல் | சூழலை மெருகூட்டுதல் | Shine/cleaning |
| 4.செயிகெத்சு (Seiketsu) | தரநிர்ணயம் செய்தல் | மேற்கூறிய மூன்றையும் திரும்பத் திரும்ப செய்து சுத்தமாக வைத்திருத்தல் | Standardize |
| 5.சிற்சுகே (Shitsuke) | பயிற்றுதலும், ஒழுக்காற்றுதலும் | ஆதாரப்படுத்துதல் | Sustain |

இம் முறைகளை எமது நிறுவனங்களிலும், அலுவலகங்களிலும் கைக்கொண்டு செயற்பாட்டை வினைத்திறனுடையதாக்க முடியும்.

**ஆக்கம்**
**திரு.சு.தர்மரத்தினம்,**
**அதிபர், கிளி/வன்னேரிக்குளம் ம.வி,**
**கிளிநொச்சி.**

## புலிகளுடன் உடன் பேச்சை ஆரம்பிக்க பிரதமர் மன்மோகன்சிங் கோரிக்கை

சிறிலங்கா எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும், இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கும் நடாத்திய விரிவான பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து, இந்தியப் பிரதமர் வெளியிட்டுள்ள உத்தியோகபூர்வ அறிக்கையில், சமாதானப் பேச்சுக்களை உடனே ஆரம்பிக்கும்படி கோரியுள்ளார்.

எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய, முன்னணி, ஆளும் அரசுக்குச் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க முழுமையான ஆதரவையும், ஒத்துழைப்பையும் வழங்கும் என்று உறுதி கூறிய ரணில், பேச்சுவார்த்தைகள் இழுத்தடிக்கப்படுவதனால் எழக்கூடிய பாரிய அபாயத்தையும், போர் ஆரம்பிக்கும் பட்சத்தில் ஆசியப் பிராந்தியத்தில் மீண்டும் எழக்கூடிய சீரற்ற அரசியல் பதட்டநிலையையும் விரிவாக விளக்கியுள்ளார். எதுவித நிபந்தனையுமற்ற ஆதரவை எதிர்க்கட்சி வழங்குவது சிறிலங்கா பாராளுமன்ற வரலாற்றில் இதுவே முதற்தடவை என்று குறிப்பிட்ட ரணில், இந்த ஆதரவைப் பயன்படுத்தி சனாதிபதி பேச்சுவார்த்தையை முன்னெடுத்து சிறிலங்கா இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முன்வரவேண்டுமென இந்தியா கோரவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். இதையடுத்தே இந்தியப் பிரதமர் இவ்வேண்டுகோளை விடுத்துள்ளார்.

சனநாயக உரிமைகளையும், ஒற்றையாட்சியையும் பேணும் வகையில் சிறிலங்காவில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுவது மிகவும் அவசியம் என்றும், அதனால் பேச்சுவார்த்தைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் இந்தியப் பிரதமர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார்.

## போர்த்துக்கல் பிரஜையின் அறையில் 2 இலட்சம் ரூபா பணம் கொள்ளை

(கொழும்பு)

போர்த்துக்கல் தேசத்தைச் சேர்ந்த சமாதான ஆர்வலரான பெண்மணியொருவரின் பல இலட்சம் ரூபா பணம் மற்றும் உடமைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் இப்பெண்மணியின் மூதூரில் உள்ள அறையில் இருந்து இரண்டு இலட்சம் ரூபா பணமும் 80,000ரூபா பெறுமதியான கமெராவுமே கடந்த மூன்றாம் திகதி கொள்ளையிடப்பட்டதாக மூதூர் பொலிசார் தெரிவித்துள்ளனர். இக்கொள்ளை தொடர்பாக தீவிர விசாரணைகளை பொலிசார் மேற் கொண்டு வருகின்ற போதிலும் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை

## அப்துல் காதரை விடுவிக்குமாறு பிக்குகள் குழு கோரிக்கை

ஊழல் மோசடி குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு, தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அப்துல் காதரை விடுவிக்குமாறு பௌத்த பிக்குகள் குழுவொன்று கோரிக்கை விடுத்துள்ளது.

அஸ்கிரிய மகாநாயக்க தேரர் உடுகம சிறி புத்தரஹிட்ட தேரர் தலைமையிலான 300 பௌத்த பிக்குகள் கையொப்பமிட்ட கடிதமொன்றும் சிறிலங்கா சனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சிறிலங்காவின் முன்னாள் கூட்டுறவுத்துறை அமைச்சர் அப்துல் காதர், சிறந்த மனிதரெனவும், மக்களுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் அரசியல்வாதியெனவும் தெரிவித்துள்ள பௌத்த பிக்குகள், அவரை விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கருஜெயசூரியவின் அலுவலகம் தாக்கப்பட்டது குறித்து விமல்வீரவன்ச, விஜிதஹேரத்தை விசாரணைக்கு வருமாறு அழைப்பு

(கொழும்பு)

கடந்த பொதுத் தேர்தலின் போது முன்னாள் ஐ.தே.க உறுப்பினரும், அமைச்சருமாகிய கருஜெயசூரியவின் அலுவலகத்தை தாக்கியமை தொடர்பாக ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினரான விமல்வீரவன்ச, தேசிய உரிமை, கலாசார அமைச்சர் விஜிதஹேரத் ஆகியோரை விசாரணைக்கு வருமாறு கொழும்பு மேலதிக நீதிபதி அமாலி ரணவீர உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இது தொடர்பான விசாரணை நவம்பர் 19ஆம் திகதி நடைபெறவுள்ளது.

2004ஆம் ஆண்டு மார்ச் 11ஆம திகதியன்று அல்லது அக்காலப் பகுதியில் ராஜகிரிய பகுதியில் சந்தேகத்திற்கிடமான வகையில் நடமாடிய சிலர் ரவிகருணாநாயக்கவின் அலுவலகத்துள் அத்துமீறிப் புகுந்து தாக்குதல் நடத்தி 27 ஆயிரம் ரூபா பெறுமதியான சொத்துக்களை சேதப்படுத்தியமை, கைத்துப்பாக்கியைக் காட்டி அங்கிருந்தோரை அச்சுறுத்தியமை போன்ற பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக நேரடியாக குற்றஞ் சாட்டப்பட்டிருப்போர் ஐ.ம.சு.முன்னணி ஆதரவாளர்களான பிரியந்ததுகித, குணசேகர சிசிரசேன்பதி கஹவத்த, கருணாரத்ன பெரேரா,எதிரிசிங்க, சசிந்திர குமாரவீரசிங்க உள்ளிட்ட பலராகும் இதுதொடர்பாக முன்னர் விசாரணை நடத்திய வேளை சந்தேக நபர்கள் தாம் நிரபராதிகள் எனக் கூறியதையடுத்து வழக்கு நவம்பர் 19ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்டது.

## நிதிமோசடியில் ஈடுபட்ட தளபதி சிசிர விஜயசூர்யவை கட்டாயவிடுப்பில் அனுப்ப சாந்தகொட்டேகொட சிபார்சு

லஞ்ச ஊழல் மற்றும் பண மோசடிக் குற்றச்சாட்டில் லஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுப் பின்னர் நிபந்தனையின் பேரில் விடுதலை செய்யப்பட்ட சிரேஷ்ட இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் சிசிர விஜயசூரியவை கட்டாய லீவில் அனுப்புமாறு இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சாந்த கொட்டேகொட பாதுகாப்பு அமைச்சிற்கு சிபாரிசு செய்யவுள்ளதாக தெரியவருகிறது.

வருகிற வருடம் (2005) ஜனவரி 2ம் திகதி தனது 55ஆவது வயதை முடிக்கும்போது ஓய்வு பெறவுள்ள விஜயசூர்ய, விஜயபாகு படையணியின் கட்டளைத் தளபதியாகக் கடமையாற்றி வந்தார். சாந்த கொட்டேகொடவின் அவசர அறிவித்தலின்படி, மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலாவும் மேஜர் ஜெனரல் ஜி.டபிள்யூ. ஜயசுந்தரவும், மோசடியில் கைதான விஜயசூர்யவின் பணிகளை மேற்பார்வை செய்ய நியமிக்கப்பட்டுள்ளார்கள். சனவரி மாதத்தில் ஓய்வு பெறும்வரை, விஜயசூர்யவை கட்டாய விடுமுறையில் செல்ல அனுமதிக்கும்படியே சாந்தகொட்டேகொட கோரியுள்ளார். 1997இல் இருந்து 2001ஆம ஆண்டு காலப் பகுதிக்குள் 1.9 மில்லியன் ரூபா பண மோசடி மற்றும் லஞ்ச ஊழலில் விஜயசூர்ய ஈடுபட்டுள்ளமை நீதிமன்றத்தில் வெளியானதையடுத்தே இத்தகைய அவசர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

### முஸ்லிம் இளைஞர் கைது

மட்டக்களப்பு ஏறாவூரில் முஸ்லிம இளைஞரொருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை போதைப்பொருட்களுடன் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில வைக்கப்பட்டுள்ளார். இவர் ஏற்கனவே சிறிலங்கா இராணுவ சேவையிலிருந்து விலகியவர் என விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. திருகோணமலையிலிருந்து மட்டக்களப்பு நோக்கி வந்த பயணிகள் பஸ்ஸொன்றில் ஏறாவூரை வந்தடைந்த சமயம் பஸ் தரிப்பில் வைத்து கைதுசெய்யப்பட்டார்.

## ஒரு இலட்சம் ரூபா மதுபானம் அமைச்சரின் வீட்டில் கொள்ளை

(கொழும்பு)

சிறிலங்காவின் பிரதியமைச்சர் ஒருவரின் வீட்டில் கொள்ளையர்கள் உட்புகுந்து 'ரிவோல்வர்' துப்பாக்கியுடன் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான மதுபானத்தையும், பெறுமதியான பொருட்களையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

நகர அபிவிருத்தி மற்றும் நீர்விநியோகப் பிரதியமைச்சரான மகிந்த அமரவீரவின் தியவன்ன ஓயாவின் அருகேயுள்ள வீட்டினுள் சில தினங்களுக்கு முன் இரவில் உட்புகுந்த கொள்ளையர்கள் அமைச்சரின் துப்பாக்கியையும் ஒரு இலட்சம்ரூபா மதிப்புள்ள 'ஸ்கொச்விஸ்கி' உட்பட பெறுமதி வாய்ந்த பொருட்களையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். இதுகுறித்து பிரதியமைச்சர் தெரிவிக்கையில்,

வைபவம் ஒன்றிற்காக குடும்பத்தினருடன் தான் வெளியே சென்றிருந்த சமயம் இக்கொள்ளை இடம்பெற்றதாகவும்,

வீட்டைச் சுற்றி பணியில் அமர்த்தியிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்களையும் அன்று தன்னுடன் அழைத்துச் சென்றிருந்ததாகவும் கூறியுள்ளார்.

அயலவர்கள் வழங்கிய தகவலையடுத்து மோப்பநாய்களுடன் வீட்டிற்குவந்த தலங்கம பொலிசாரால் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

## முக்கிய சந்திப்புக்களை நடத்த
## த. கூட்டமைப்பினர் திருமலை செல்வர்

தமிழ்க் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்வரும் 15, 16, 17 ஆம் திகதிகளில் திருகோணமலையில் முக்கிய சந்திப்புக் களையும், பொதுக் கூட்டங்களையும் நடாத்தவுள்ளதாகத் தெரியவரு கிறது. நீண்டநாட்களுக்கு முன்பாகவே இந்த விஜயம் திட்ட மிடப்பட்டபோதும் பல்வேறு நடைமுறைப் பிரச்சினைகள் காரணமாக அவை பிற்போடப்பட்டுவந்தன.

# 01 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

முல்லைத்தீவுசெம்மலை கிராமபாடசாலை அருகா மையை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட பரந்தாமன் மைத்ரேகி தம்ப திகளின் அருந்தவப் புதல்வி செல்வி இலக்கியா பரந்தாமன் தனது முதலாவது பிறந்தநாளை மிக விமர்சையாகக்கொண் டாடுகின்றார். இவரை அன்பு அம்மா, அப்பா, தாய் வழிப் பேரன் பேத்தியான, சுந்தரலிங்கம் செல்வராணி. தந்தை வழி பேரன் பேத்தி ந. முருகுப்பிள்ளை இராசாத்தி ஆகியோருடன் மாமன்மாரான சு. றமேஸ்(இலண்டன்), இ. அனிந்தினி மாமி (யாழ். பல்கலைக் கழகம், அரவிந்தன் மாமா (இலண்டன்), அப்பம்மாவான செல்வநாயகம் நல்லம்மா ஆகியோர் எல்லாம் வல்ல செம்மலைமாணிக்கப்பிள்ளையார் அருளுடன் அறுபத்து நான்கு கலைகளும் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்
திரு.திருமதி க.சுந்தரலிங்கம்
(பேரன்,பேத்தி)

இ ல க் கி யா





14-10-2004

(சி.10558)

# 5ஆம் ஆண்டு நீங்காத நினைவில்

முத்தாக 20 - 03 - 1982

வித்தாக 14 - 10 - 1999



## லெப்ரினட். கண்ணாளன்
### லோகேந்திரன்- சுஜேந்திரன் (சுஜன்)
செல்வபுரம் முல்லைத்தீவு

பிஞ்சு முகத்துடன் கொஞ்சும் மழலையாய்
கல்லறைதனில் கண்மூடி உறங்கும் கண்ணாளா
ஆண்டுகள் ஐந்து மறைந்தாலும்
உன் அழகு முகம் மறையாது ஐயா
ஆறுமோ எம் துயரம் - ஆனாலும்
வாழ்கின்றோம் உன் நினைவுடன்.

அனைத்து மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம். என்றும் உன் நினைவுடன்
அப்பா, அம்மா.
தம்பிகள் (சுமணன், சுதனன்)
உறவுகள்.

செல்வபுரம்,
முல்லைத்தீவு.
(5145)

# எரிபொருளின் விலை உயர்வுக்கு ஜே.வி.பி.எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும்

## ஐ. தே. கட்சி பா.உறுப்பினர் தயாசிறிவிஜய சேகர

(கொழும்பு)

அரசாங்கம் தொடர்ந்தும் எரி பொருட்களின் விலையை உயர்த் திவருவதால் முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் பலத்த அசௌ கரியங்களை சந்தித்து வருகின் றனரென ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி விஜயசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர்களு டனான சந்திப்பின் போதே அவர் இதனைத்தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்: சனா திபதி கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர் கொழும்பில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் உரை நிகழ்த்துகையில் நிவாரணம் வழங் குவதில் எவ்வித பிரயோசனமும் இல்லை. எனவே நாட்டின் பொருட் களின் விலை உயர்வுக்கு சமமாக பொருட்களின் விலை உயர்வை எதிர்ப்பது போதாது என கூறியிருந் தார். எனினும் மறுநாளே சனா திபதி நான்கு பிரதி அமைச்சர் களுக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். என்பதனையும் அவர் சுட்டிக்காட்டினார். எனினும் இந் நடவடிக்கை நாட்டின் வாழ்க்கைச் செலவு அதிகரித்துவரும் நிலை யில் ஒருஅவசியமற்ற செயலென வும் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி. இத்தகைய நடவடிக் கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்த போதிலும் அதனைக் கண்டு கொள்ளாமல் அலட்சியம் செய்யும் நிலையை இன்று காட்டிவருகிறது. இந்நிலையை மாற்றி ஜே.வி.பி. அரசின் இத்தகைய நடவடிக்கை களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும் என்றார். (32)

## பீடாதிபதியின் ஆலோசனை

(கொழும்பு)

சமாதானத்தை தமிழ்க் கூட்ட மைப்பினர் விரும்பினால் சனா திபதி ஆரம்பித்துள்ள சமாதான சபையில் கலந்து கொள்வது மிக அவசியம் என மல்வத்த பீடாதிபதி திப்பெட்டுவாவே சித்தாத்தசுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தினால் நாடு சீரழிந்தது ஆனால் தற்பொழுது நாட்டில் யுத் தங்கள் கிடையாது. இப்பொழுது நாட்டிற்கு சமாதானம் தேவை, நாங்கள் எதைக் கூறினாலும் அர சாங்கமும் எதிர்க்கட்சியும் ஒன்றி ணைந்தால் நாட்டில் சமாதானம் ஏற்படும். அப்பாவி இளைஞர்கள் இந்த யுத்தத்தினால் கொல்லப்பட் டுள்ளனர். இவர்கள் எல்லோரும் இந்தநாட்டில் வசிப்பவர்கள், கடந்த கால சம்பவங்கள் எல்லாம் எமக் குத் தெரியும். இவைகள் எல்லா வற்றையும் மறந்து சனாதிபதியின் ஆலோசனைச் சபைக் கூட்டத்தில் நிச்சயமாகக் கலந்து கொண்டு சமா தான நடவடிக்கைகளை முன் னெடுத்துச்செல்வதற்கு எம்முடன் இணைந்து வாருங்கள் என மல் வத்த பீடாதிபதி தெரிவித்துள்ளார்.

## ஹட்டனில் தீவிபத்தில் 20லயன்அறைகள்தீக்கிரை

ஹட்டன் திம்புல்ல மவுன்ட் வெனன் தோட்டத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் தமிழ் தொழிலாளர் களின் 20 லயன் அறைகள் தீக்கி ரையாகின. இதன் காரணமாக சுமார் 120 தொழிலாளர்கள் நிர்க் கதியாகினர். இவர்கள் தோட்ட கோயிலில் தஞ்சம் அடைந்துள் ளனர். இந்த தீ விபத்தில் குறிப்பிட்ட தோட்ட குடியிருப்புகளின் உடமை கள் அனைத்தும் தீக்கிரையாகின. தீ விபத்துக்கான காரணம் எதுவும் தெரியவரவில்லை. (32)

## அரசின் அஞ்சல்துறை ஊழியர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில்

அஞ்சல்துறை ஊழியர்கள் நேற்று முன்தினம்முதல் தொழிற் சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள் ளனர். தமக்கு கடந்த மாதத்துக் கான மேலதிக கொடுப்பனவுகள் இன்னும் வழங்கப்படவில்லை என்பதை ஆட்சேபித்தே இந்தப் போராட்டம் நடத்தப்படுகிறது. இதன் அடிப்படையில் இவர்கள் மேலதிக நேர வேலையை புறக்கணிக்கும் போராட்டத்திலேயே ஈடுபட்டுள்ள தாக தெரிவிக்கப்படுகிறது. இதன் காரணமாக நாட்டின் அஞ்சல் சேவையில் பாதிப்புகள் ஏற்படும் நிலை காணப்படுவதாக தெரிவிக் கப்படுகிறது.

இதேவேளை எதிர்வரும் மூன்று மாதகாலப்பகுதிக்கான மேலதிக நேரக் கொடுப்பனவுக்கான ஒதுக் கீட்டை திறைசேரியிடம் கோரியி ருப்பதாகவும் எனவே ஊழியர்கள் மேலதிக பணிப்புறக்கணிப்பை விலக்கிக்கொள்ள வேண்டும் என்றும் அஞ்சல் மாஅதிபர் சேனா தீர தெரிவித்தார்.

# 45ஆம் நாள் நீங்காத நினைவஞ்சலி

மலர்வு 16 - 12 - 1981

உதிர்வு 31 - 08 - 2004



## நாகராசா சுவீதா

காவியமான என் அன்பு மகளே
ஓவியமாய் ஓடி மறைந்ததென்ன உன் உயிர்
காக்கை குஞ்சுகள்போல் நீங்க இருவர் என்னிடம்
உன்தங்கை தவிக்கவிட்டு ஓடி மறைந்த தென்னம்மா
உன் உயிர் அல்லி மலரான
உன் மகளை தவிக்கவிட்டு சென்றாயம்மா.

M.ஈஸ்வரி,
NO 49 அண்ணா வீதி,
ஆனந்தபுரம்
கிளிநொச்சி.
(5174)

அன்பு அம்மா ஈஸ்வரி
தங்கை ஜொலிதா

# ஐந்தாம் ஆண்டு நினைவலையில்

கடந்த 14 .10.1999ஆம் ஆண்டு அன்று அம்ப காமம் பகுதியில் பெருமெடுப்பில் முன்னேறிய இராணு வத் துடனான நேரடி மோதலின் போது வீரச்சாவைத் தழுவிக் கொண்ட

தாய் மடியினில் 13 - 02 - 1975

தாயக மண்ணில் 14 - 10 - 1999



## கப்டன் திலீபனா
(மாலதி படையணி மருத்துவப்போராளி)
### சதாசிவம் — சதானந்தி
சிலாவத்தை முல்லைத்தீவு

துள்ளித்திரிய வேண்டிய பள்ளிப்பருவமதில்
தாயக விடுதலைக்காக புறப்பட்ட-திலீபனாவே!
மருத்துவத்துறையில் அளப்பரிய சாதனை புரிந்தவளே
மகத்தான பணியென அண்ணன் சொல்லுக்கு
செயல்வடிவம்கொடுத்தவளே
ஆண்டு ஐந்தானாலும் ஆறுமா எம்மனது
நிச்சயம் நாளை அன்னை மண் விடிவு பெறும்.

என்றும் உன் நினைவினில்
அன்பு அம்மா, சின்னக்கா, ச. சகிலா,
ஆசைத் தம்பி சதா, ஜேர்மனியில் இருக்கும்
பெரியக்கா சுதா, அத்தான் தர்மலிங்கம்,
பிள்ளைகள் திலீபனா, துஷான், அம்மம்மா ஆகியோர்.

சிலாவத்தை,
முல்லைத்தீவு.
(5167)

# பேச்சுக்களில் உடன்பாடு காணப்பட்டாலும் ஆயுதங்களை ஒருபோதும் கைவிட மாட்டோம்

## - மக்கள் போர்ப்படை இயக்கத் தலைவர் அறிவிப்பு

(ஹைதராபாத்)

ஆந்திர மாநில அரசுடன் பதினைந்தாம் திகதி நடக்கும் பேச்சு வார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டாலும் துப்பாக்கிகளைக் கீழே போடமாட்டோம் எங்கள் ஆயுதப் போர் தொடரும் என்று நக்சலைட் இயக்கத் தலைவர் அறிவித்துள்ளார்.

ஆந்திராவில் மக்கள் போர் படை என்ற பெயரில் நக்சலைட்டுக்கள் ஆயுத போராட்டம் நடத்தி வருகிறார்கள். அந்த நக்சலைட்டுக்களின் தலைவர்களுடன் சமரச பேச்சுவார்த்தை நடத்த ஆந்திராவில் காங்கிரஸ் முதல்வராக பொறுப் பேற்றுள்ள வை.எஸ் ராஜசேகர ரெட்டி முன்வந்துள்ளார். ஹைதராபாத்தில் இந்தப்பேச்சு வார்த்தை நாளை நடைபெறவுள்ளது. இதற்காக காடுகளில் தலைமறைவாக இருந்த நக்சலைட் தலைவர்கள் முதன் முறையாக நேற்று முன் தினம்வெளி உலகத்திற்கு வந்தனர்.

இதன்போது தனி மாநிலமாக தெலுங்கானா உட்பட மக்களின் சில முக்கிய பிரச்சினைகள் குறித்து மட்டுமே தாங்கள் பேச்சு நடத்தவுள்ளதாக ஹைதராபாத் வந்தடைந்த நக்சலைட் தலைவர்கள் கூறியுள்ளனர்.

மக்கள் பிரச்சினைகளில் முக்கியமான வற்றுக்கு தீர்வு காண்பதற்கு அரசுடன் பேச்சுநடத்தவுள்ளதாகவும் இவ்வியக்கம் கூறியுள்ளது. அல்-ஹைதா போன்ற இயக்கங்களுடன் தமக்கு எவ்வித தொடர்பும் இல்லை என்றும் நக்சலைட் தலைவர்கள் அறிவித்துள்ளனர்.

# காங்கிரஸ் கட்சியில்சேர வருண்காந்தி முயற்சி

மேனகா காந்தியின் மகன் வருண்காந்தி காங்கிரசில் சேருவதற்கு முடிவெடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் சோனியா காந்தியை 3 முறை சந்தித்துப் பேசியுள்ளார்.

இந்திராகாந்தியின் இளைய மகனும், ராஜீவ் காந்தியின் தம்பியுமான சஞ்சய் காந்தி 1980 ஆம் ஆண்டு நடந்த விமான விபத்தில் இறந்தார். அதைத் தொடர்ந்து அவரது மனைவி மேனகாவும்,அவரது மகன் வருண்காந்தியும் 1982 ஆம் ஆண்டு இந்திராகாந்தி குடும்பத்தைவிட்டுப் பிரிந்தனர்.

அதன்பிறகு கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக மேனகாகாந்தி காங்கிரசுக்கு எதிராக செயற்பட்டு வருகிறார். கடந்த மக்களவைத் தேர்தலுக்கு முன் கடந்த பெப்ரவரி மாதம் மேனகாவும்,வருண்காந்தியும் பா.ஜ.வில் சேர்ந்தனர். ஆகையால் வருண்காந்திக்கு 24 வயது. அவர் தேர்தலில் போட்டியிட முடியவில்லை. அதைத் தொடர்ந்து மேனகாவும்,வருணும்,பா.ஜ.கூட்டணியை ஆதரித்து பிரசாரம் செய்தனர். இந்த நிலையில் வருண்காந்தி காங்கிரசில் சேர முடிவுசெய்துள்ளார். இது தொடர்பாக அவர் காங்கிரஸ் தலைவியான சோனியாவை 3 முறை சந்தித்துப் பேசியுள்ளதாகத் தெரியவருகிறது.

# ஆடை உற்பத்தித்துறையில் இந்தியா முன்னிலை வகிக்கும்

## வர்த்தகத்துறை இணையமைச்சர் இளங்கோவன்

(புதுடில்லி)

ஆடை உற்பத்தித்துறையில் இந்தியா வருங்காலத்தில் ஒரு வல்லரசாக உருவாகும் என்று இந்தியாவின் மத்திய தொழில் வர்த்தகத்துறை இணையமைச்சர் இளங்கோவன் கூறியுள்ளார்.

கோவையில் திங்களன்று மாவட்ட ஏற்றுமதி, இறக்குமதியாளர் சங்கத்தைத் தொடக்கி வைத்துப் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில; ஆடை ஏற்றுமதியில் உலகளவில் இந்தியாவும் முன்னணி நாடாக விளங்குவதாகவும், இத்துறையில் இந்தியாவைவிட முன்னேறிய நாடுகள் பல இருந்தாலும், நாட்டில் இப்போது இத்துறையில் ஏற்பட்டு வரும வளர்ச்சி, வரும் ஆண்டுகளில் இந்தியா ஆடைஉற்பத்தித் துறையில் ஏற்றுமதியில் தலை சிறந்த நாடாக உருவாக வழிவகுக்குமென்றும் இளங்கோவன் கூறினார்.

# மகாராஷ்டிரா சட்டசபைத் தேர்தல் பலத்த பாதுகாப்புடன் நடைபெற்றது

## - 16-ஆம் திகதி முடிவுகள் வெளியாகும்

(புதுடில்லி)

மகாராஷ்டிரா மாநில சட்ட சபைக்கான தேர்தல் வாக்குப் பதிவுகள் நேற்று இடம்பெற்றன. தேர்தலையொட்டி மும்பை உள்ளிட்ட மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் பலத்த பொலிஸ் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

288உறுப்பினர்களைக் கொண்ட மகாராஷ்டிராவின் சட்ட சபைத் தேர்தலில் ஆளும் காங்கிரசுடன் சரத்பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரஸ் ஓரணியாகவும், பாரதிய ஜனதா- சிவசேனா கூட்டணி ஓரணியாகவும் மோதுகின்றன.

இத் தேர்தலுக்கான பிரச்சாரம் நேற்று முன்தினம் முடிவடைந்துள்ளதையடுத்து, நேற்றுக்காலை 7.30 மணிக்கு வாக்குப் பதிவுகள் ஆரம்ப மாகியுள்ளன.

அத்துடன் பீகார் மாநிலத்தில் லல்லுப்பிரசாத் யாதேவ் ராஜினாமா செய்த மதேபுரம் தொகுதி, உட்பட 04 தொகுதிகளுக்கும், காஷ்மீரில் முக்தி முகமதுசையத் போட்டியிடும் பகற்காத் தொகுதி உத்தரப் பிரதேசம், மணிப்புரி கர்நாடகத்தில் ஜீகார் உட்பட நாட்டின் பல்வேறு மாநிலங்களில் இது வரை தேர்தல் நடைபெற்ற 33 தொகுதிகளில் சட்டமன்ற வாக்களிப்பு நேற்று இடம்பெற்றன.

நேற்றுப் பதிவான வாக்குகள் அனைத்தும் எதிர்வரும் 16ஆம் திகதியே எண்ணப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

### காங்கிரஸ் வெற்றி

(புதுடில்லி)

அருணாச்சலப் பிரதேசத்தில் 60 தொகுதிகளுக்கு நடத்தப்பட்ட சட்டமன்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சி 34 தொகுதிகளில் வெற்றி பெற்று தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்கவுள்ளது.

இதனையடுத்து, சட்டப்பேரவைத தலைவர்களை தேர்ந்தெடுப்பதற்கான சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டம் மாநில தலை நகரில் நேற்று நடைபெற்றுள்ளது.




சொந்த ஊரான கலிங்கப்பட்டியில் பொதுமக்களுடன் சேர்ந்து ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ குளம் தூர்வாருகிறார் அத்துடன் அவர் கூடையில் மண்சுமந்து செல்வதைப் படத்தில் காணலாம்.


# பதவி வெற்றிடம்

ஆயுட் காப்பீட்டுக் கூட்டுத்தாபனம் (இலங்கை)வரை

இப்பிரபல காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு

**காப்புறுதி முகவர்கள் தேவை**

கல்வித் தகைமைகள்: க.பொ.த.சாதாரணம் (கணிதம் முக்கியம்)
க.பொ.த. உயர்தரம்

வயதெல்லை: 18-55 வரை


வேறு காப்புறுதி நிறுவனங்கள் தவிர்ந்த தனியார் நிறுவனங்களில் வேலை செய்வோரும் பகுதி நேரமாக இணைந்து கொள்ளலாம்.

ஆர்வமுள்ள ஆண், பெண் இருபாலரும் 14-10-2004 இல் இருந்து ஞாயிறு தவிர்ந்த 23-10-2004 வரை கீழ் உள்ள முகவரிக்கு நேர் காணலுக்காகச் சமுகம் தரலாம்.

ஆயுட் காப்பீட்டுக் கூட்டுத்தாபனம் (இலங்கை) வரை
55, R.G. கட்டடம்,கன்னாத்திட்டி
யாழ்ப்பாணம்
தொலைபேசி இல.6325,6326 (சி.10267)


# 5 ஆம் ஆண்டு நினைவினில...

எம் இல்லத்தில் — எம் உள்ளத்தில்



09 – 04 – 1976 | 14 – 10 – 1999

## மேஜர் இளம்பிறை

(மாலதி படையணி)

**(நாகேந்திரம் ஜெயகலா)**

சம்பவம்:- அம்பகாமம் பகுதியில் வோட்டசெற்-01 இராணுவ நடவடிக்கையின் போது

ஐந்தாண்டு ஆனதம்மாஉனை பிரிந்து
ஆறவில்லை துயரம்.
இன்னும் மாறவில்லை-விழிகளில்
நீரோடு நீள்கிறது உன் நினைவு
நூறாண்டு ஆனாலும் மாறாதம்மா.

இந்நாளில் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம்.


அண்ணாசிலையடி,
அந்தோனியார் கோயில் முன்பாக,
அக்கராயன்.

உன் நினைவில் வாழும்
குடும்பத்தினர்.

(5182)

# 5 ஆம் ஆண்டு நினைவு நாள்...

தாயின் மடியில் 1974 - 10 - 04



தாயக மண்ணில் 1999 - 10 - 14

## லெப்டினன்ட் குட்டிமணி

சண்முகராஜா அருமருந்தன்

எம் உறவுகளின் உயிர்த்துடிப்பாய் உதித்தவனே!
உதயச் சூரியனே அருமருந்தே!
செல்வமே-உன் பிரிவால்
விழிகலங்கி நிற்கிறோம்.
மகனே நீ எங்கே
பகைவனை விரட்டி வீழ்த்திய வேங்கையே!
குட்டிமணியென நீ
எட்டி நடந்ததை நினைக்கின்றோம்-எம்
விழிகலங்கி நிற்கின்றோம்.

இல.38,
சிவநகர்,
உருத்திரபுரம்.

குடும்பத்தினர்.

(5181)

# மிக ஜாக்கிரதையான திட்டமிடலே அவுஸ்.வெற்றியின் இரகசியமாகும்



-அடம்கில்கிறிஸ்ட்

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் தொடர் வெற்றிகளுக்கான காரணங்களைப் பட்டியலிட்டுள்ளார். அந்த அணியின் விக்கெட்காப்பாளரும்,அணித் தலைவருமான அடம் கில்கிறிஸ்ட். சென்னை ஓட்டேரியில் உள்ள குடிசைப் பகுதிச் சிறுவர்கள், பொதுமக்களிடம் செவ்வாய்க்கிழமை சிறிது நேரம் அளவளாவினார். கில்கிறிஸ்ட். அப்போது துடுப்பாட்ட நுணுக்கங்கள் குறித்து அவர்களுக்குப் பாடம் நடத்தினார். இந் நிகழ்ச்சிக்கு “வேர்ல்டுவிஷன்’ என்ற அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது. நிறுவனத்தில் சேர்ந்துள்ளார். கில்கிறிஸ்ட் நிருபர்களிடம் அவர் கூறியதாவது; இந்தியா சச்சின் இல்லாமல் விளையாடுகிறது என்றால். நாங்கள் கூடப் பொண்டிங் இல்லாமல் தான் விளையாடுகிறோம் பொண்டிங்கின் உடல் தகுதி குறித்துப் பல்வேறு பரிசோதனைகள் செய்யப்பட்டு வருகின்றன. 3ஆவது டெஸ்டுக்கு தகுதி பெறுவாரா என்பது குறித்தும் பரிசோதனை தொடர்கிறது. தற்போது கிரிக்கெட்டில் பல்வேறு தொழில் நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் இவை போதுமானதுமல்ல. தவறே இழைக்காது உறுதிசெய்யப் பட்டவையும் அல்ல. சென்னை டெஸ்டில் நாணயச்சுழற்சியில வெற்றி பெற்றால் முதலில் துடுப்பாட்டுத்து ஆடுவீர்களா எனக் கேட்கிறீர்கள். அது குறித்து தற்போது எதுவும் கூறமுடியாது. அவுஸ்திரேலியாவின் அற்புதமான வெற்றிகளுக்குக காரணம் என்ன எனக்கேட்கிறீர்கள். மிக ஜாக்கிரதையான திட்டமிடல் பயிற்சி- போட்டி- தேர்வு முறைகள் எங்கள் நாட்டில் இருப்பதால் தான் வெற்றியை ஈட்டி வருகிறோம். இந்தியாவுடனான தொடர் எங்களுடைய மிக முக்கியமான போட்டி அணித் தலைவரான எனக்கும் மிக முக்கியமானது என்றார்.




## பாக்டெல் முக்கோண ஒரு நாள் போட்டி

# பாகிஸ்தான் சிறிலங்கா அணிகள் பலப்பரீட்சை

பாகிஸ்தானில் நடைபெற்று வரும் பாக்டெல் முக்கோண கிரிக்கெட் தொடரின் இரண்டாவது போட்டியில் இன்று பாகிஸ்தான், சிறிலங்கா அணிகள் பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

இப்போட்டித் தொடரில் சிறிலங்கா அணி பாகிஸ்தானிடம் ஏற்கனவே தோல்வி அடைந்திருந்தாலும் கூட சிறிலங்கா அணி பலம் வாய்ந்த நிலையில் அண்மைக் காலத்தில் தன்னை பிரகாசப்படுத்திக் கொண்டதன் காரணமாக இன்றையபோட்டியில் சிறிலங்கா வெற்றி பெற்றாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், சொந்த மண்ணில் சிறிலங்காவிடம் பாகிஸ்தான் மீண்டுமொரு முறை கிண்ணத்தை தாரை வார்க்குமா என்ற கருத்து இன்றைய போட்டி முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. எனவே, மிகப் பலம் வாய்ந்த போட்டியாக இன்றைய போட்டி அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இன்றைய போட்டியில் பாகிஸ்தான் அணியில் மீண்டும் அழைக்கப்படுகிறார் மொயின் கான் இது பாகிஸ்தானின் பலத்துக்கு மேலும் வலுச்சேர்க்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# காலப்பந்து போட்டியில் கலவரம் நால்வர் பலி; 8 பேர் படுகாயம்

ஆபிரிக்காவில் லோம் மைதானத்தில் நடைபெற்ற உலகக் கிண்ண காலப்ந்தாட்ட தகுதிப் போட்டியொன்றின் போது ஏற்பட்ட மோதலில் ஒருவர் பலியானதுடன் 8 பேர் காயமடைந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. மேற்படி போட்டி மாலே அணிக்கும், டோகோ அணிக்கும் இடையில் கயானாவில் நடைபெற்றவேளை இரு பகுதியினருக்கிடையில் ஏற்பட்ட மோதலில் 3 பேர் பலியானதாகவும் மேலும் ஒரு போட்டியின்போது மின்சாரம் தடைப்பட்டமையினால் ஏற்பட்ட கலவரத்தினால் நசியுண்டு இறந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இது பற்றி ஆராய விசேட அமைச்சரவைக் கூட்டம் ஒன்று அங்கு நடைபெற்றுள்ளது.

# அரசியலையும் விளையாட்டையும் வேறுபடுத்த வேண்டும் - தைபு



அரசியலையும்,விளையாட்டையும் வேறுபடுத்த வேண்டும். அவை இரண்டையும் ஒன்றாக வைத்துப் பார்ப்பது தவறான விடயம் என்று சிம்பாப்வேயின் மிக இளம்வயது அணித் தலைவர் தட்டண்டா தைபு தெரிவித்துள்ளார். இங்கிலாந்து அணி அடுத்த மாதம் அளவில் சிம்பாப்வேக்கான சுற்றுலாவை மேற்கொண்டு விளையாடவுள்ளது.

இங்கிலாந்து அணியின் அனைத்து திறமையான வீரர்களும் வந்து விளையாடுவதையே நாங்கள் எதிர்பார்க்கின்றோம். ஒரு தலைசிறந்த அணியோடு விளையாடுவதையே நாங்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம்.

எனவே, அனைத்து வீரர்களையும் நாங்கள் நேசிக்கின்றோம். அவர்கள் அனைவரும் இங்கு வந்து விளையாடுவது முக்கியமான விடயம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அணியில் மிக முக்கியமான பெரும் புள்ளிகள் இணைத்துக் கொள்ளப்படாதது தமக்கு கவலை அளிப்பதாகவும், தாங்களாகவே வருவதற்குப் பயந்தும் அரசியலைக் காரணம் காட்டியும் விலகுவது தமக்கு ஏமாற்றமளிப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



பங்களாதேஷத்திற்கு எதிராக இரண்டு டெஸ்ட், மூன்று ஒரு நாள் போட்டிகளில் பங்கேற்பதற்காக நியூசிலாந்து கிரிக்கெட் அணி வீரர்கள் நேற்று முன்தினம் தாகா வந்து சேர்ந்தனர். விமான நிலையத்தில் இருந்து அணித் தலைவர் பிளமிங் (வலது) உள்ளிட்ட வீரர்கள் வெளியேறுகின்றனர்.


## இந். அணிக்கு அழைப்பு

பாகிஸ்தானில் நடைபெறும் சம்பியன்கோப்பை ஹொக்கிப் போட்டியில் பங்கேற்க இந்திய அணிக்கு சர்வதேசக் ஹொக்கி சம்மேளனம் அழைப்பு விடுத்துள்ளது. சம்பியன் கோப்பை ஹொக்கிப் போட்டி பாகிஸ்தானில் டிசம்பர் 4ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை நடக்கிறது.

இதில் எதன்ஸ் ஒலிம்பிக் போட்டியில் முதல் 6 இடங்களைப் பிடித்த அவுஸ்திரேலிய, நெதர்லாந்து, ஜேர்மனி, நியூசிலாந்து, பாகிஸ்தான், ஸ்பெயின் ஆகிய ஆறு நாடுகள் பங்கேற்கத் தகுதிப் பெற்றன. இந்த நிலையில் பாதுகாப்பைக் காரணம் காட்டி அவுஸ்திரேலிய அணி இந்தப் போட்டியில் இருந்து விலகியுள்ளது.

இதனால் 7ஆவது இடம் பெற்ற இந்திய அணியைச் சம்பியன் கோப்பைப் போட்டியில் பங்கேற்குமாறு சர்வதேச ஹொக்கிசம்மேளனம் முறைப்படி அழைப்பு விடுத்துள்ளது. இதனால் இந்தப் போட்டியில் இந்திய அணி கலந்து கொள்கிறது. இதனை இந்தியக் ஹொக்கிச் சம்மேளனம் உறுதி செய்துள்ளது.

# உலக சாதனையைக் காட்டிலும் டெஸ்ட் தொடரை வெல்வது முக்கியம்



-ஷேன் வோர்ன்

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளரான ஷேன்வோர்ன் சென்னையில் நிருபர்களிடம் தெரிவிக்கையில், இந்தியாவிற்கு எதிரான டெஸ்ட் தொடரை வெல்ல வேண்டும் என்பதே மிகவும் முக்கியமானதாகும். அதிக விக்கெட்டுக்கள் சாய்த்து உலக சாதனை படைப்பது சந்தோஷமான உணர்வாகும். இந்திய ரசிகர்கள் நல்ல ஆதரவு அளிக்கின்றார்கள். கடந்த முறையைவிடத் தற்போது எனது பந்து வீச்சு சிறப்பாகவுள்ளது. டெஸ்ட் போட்டியில் அதிக விக்கெட்டுக்ளைச் சாய்த்த முரளிதரனின் (532 விக்கெட்டுக்கள்) உலக சாதனையைத்தகர்க்க வோர்னுக்கு (531 விக்கெட்டுகளும்) இன்னும் 2 விக்கெட்டுக்களே தேவை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த டெஸ்டில் அவர் சாதனை படைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## தென்னாபிரிக்காவுடனான முதலாவது டெஸ்ட்; கான்பூர் மைதானத்தில் நவம்பர் இருபதில்

தென் ஆபிரிக்காவிற்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டிக்காக கான்பூர் மைதானம் தயார் நிலையில் உள்ளது. அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடர் முடிந்ததும் இந்திய அணி தென்னாபிரிக்காவிற்கு எதிராக இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் மோதவுள்ளது. இதில் முதல்போட்டி கான்பூரின் பார் மைதானத்தில் நடக்கவுள்ளது. முன்னாள் இந்திய அணித்தலைவர் அசாருதீனுக்கு ராசியான இந்த மைதானத்தில் கடந்த சில மாதங்களாக சீரமைப்புப் பணிகள் நடந்து வருகின்றன. இதனால் சர்வதேசப் போட்டிகள் இங்கு நடத்தப்படவில்லை. கடந்த ஆண்டு நியூசிலாந்திற்கு எதிரான டெஸ்ட் போட்டி இங்கு நடப்பதாக இருந்து பின்னர் கைவிடப்பட்டது. இந்நிலையில் பராமரிப்புப் பணிகள் முடிந்து விட்டால் கான்பூர் கிரிக்கெட் சங்கத்தின் சார்பில் இங்கு சர்வதேசப்போட்டிகள்நடத்தஅனுமதி கோரப்பட்டுள்ளது.

# சென்னை டெஸ்ட் போட்டியில் விளையாட ஆர்வமாக உள்ளேன்

**டெண்டுல்கர்**

காயம் முழுமையாக குணமாகவில்லை தான் ஆனாலும் சென்னை டெஸ்டில் விளையாட விருப்பம்தெரிவிக்கிறார் சச்சின் டெண்டுல்கர். பெங்களூர் டெஸ்டில் நமது துடுப்பாட்டக்காரர்கள் ஆட்டம் வேதனையளிக்கிறதாக இருக்கிறது. இந்தத் தொடரில் இந்தியா ஆதிக்கம் செலுத்த வேண்டுமானால் தமது துடுப்பாட்டக்காரர் மிகச்சிறந்த ஆட்டத்தை மீண்டும் வெளிப்படுத்த வேண்டும். ஆட்டத்தை அவர்கள் மிகச் சிறப்பாகவே தொடங்குகிறார்கள். ஆனால் அதைப் பெரிய ஓட்ட எண்ணிக்கையாக மாற்றத் தவறி விடுகிறார்கள். அருமையாக தொடக்கம் கிடைக்கும் போது கவனமாக விளையாடி சதம் அடிக்கவேண்டும். அப்போது தான் அணிக்குப் பெரிய ஓட்ட எண்ணிக்கை கிடைக்கும் . களத்தில் நீட்டநேரம் நிற்கவேண்டும் என்று முடிவுசெய்து விட்டால்போதும் நிறைய ஓட்டம் சேர்க்க முடியும். அணி பெரியஓட்ட எண்ணிக்கையை எடுத்துவிட்டால் இந்தத் தொடரில் நிச்சயம் நம்மால் ஆதிக்கம் செலுத்த முடியும் என்றார்.

# இந்திய ஹொக்கி அணியிலிருந்து தன்ராஜ்புள்ளே புறக்கணிப்பு

இந்திய ஹொக்கி அணியின் பல்வேறு வெற்றிகளுக்குக் காரணமாக இருந்த தன்ராஜ் புள்ளே இப்போது அணியில் இருந்து நிரந்தரமாக ஒதுக்கப்படுகிறார்.

“அவர் இனி அணிக்குத் தேவையில்லை” என்று அறிவித்துள்ளார் பயிற்சியாளர். ஹொக்கிப் போட்டிகளில் சர்வதேச அளவில் பல்வேறு சாதனைகள் படைத்தவர் தன்ராஜ்புள்ளே. 37 வயதாகும் தன்ராஜ் சமீபகாலமாக இந்திய ஹொக் கிக் கூட்டமைப்பிற்கு வேண்டாத நபராக கருதப்படுகிறார். எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் அவரைத் திட்டமிட்டு ஒதுக்க முயற்சிகள் நடந்தன. நாடு முழுக்க கொந்தளித்தவுடன் வேறு வழியின்றி அணியில் சேர்க்கப்பட்டார். ஆனால், தொடர்ந்து அவர் அணியில் நீடிப்பது சந்தேகமே.

மலேசிய லீக் போட்டிகளில் பங்கேற்று விளையாடுவதால் பாகிஸ்தானுக்கு எதிரான நட்புறவு ஹொக்கித் தொடரில் தன்ராஜ் இடம்பெறவில்லை. இந்தத் தொடரில் இந்திய 2-4 என்ற பின் நிலையில் தோற்றது. தொடர் முடிந்த பிறகு இந்திய அணியின் புதிய (வெளிநாட்டு) பயிற்சியாளர் ஜெரார்ட் ராச் கூறுகை யில், “பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் தோற்றாலும் கூட நமது செயற்பாடுகள் திருப்தியளிப்பதாகவே இருந்தன. புதிய இந்திய அணியை உருவாக்கும் முயற்சியில் இப்போது இறங்கியிருக்கின்றோம். தன்ராஜ்புள்ளே, பிரபோத்சிங் போன்ற அனுபவ வீரர்கள் அணிக்குத் தேவைப் படாது. இளம் வீரர்களை ஊக்குவித்தால் மட்டுமே எதிர்கால இந்திய அணியை உருவாக்க முடியும்” எனத் தெரிவித்தார்.



# விக்ரர் ஞாபகார்த்த கால்பந்துசுற்றுப் போட்டி சென் ஜோசப் அணி சம்பியனானது



மூத்த தளபதி லெப். கேணல் விக்ரர் அவர்களின் 18ஆவது ஆண்டு ஞாபகார்த்த கால்பந்து சுற்றுப் போட்டியில் பனங்கட்டி கொட்டு சென்ஜோசப் A அணி சம்பியனானது.

நேற்று முன்தினம் மாலை 4.30 மணிக்கு மன்னார் பொதுமைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் பள்ளிமுனை புனித லூசியா அணியை எதிர்த்து சென்ஜோசப் அணி மோதியது.


முன்னதாக அணி வீரர்கள் தமிழீழ துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் சோ. தங்கன், மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இனியவன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோருக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் தலா இரண்டு கோல்களை பெற்றிருந்தபோது வெளியிலிருந்து ஏற்பட்ட தடங்கல் போட்டி இடைநடுவில் கைவிடப்படும் நிலையை உருவாக்கியது.

பின்னர் சமரசத்துக்கு வந்த போதும் புனித லூசியா அணி ஒத்துழைக்க மறுத்ததால் பனங்கட்டிக்கொட்டு சென்ஜோசப் அணி சம்பியன் அணியாக அறிவிக்கப்பட்டது.

புனித லூசியா சார்பில் அ.அன்ரனி, பிராங்லின் தலா ஒவ்வொரு கோல்களையும், சென்ஜோசப் அணி சார்பில் டிக்கோனி, நியூட்டன் தலா ஒவ்வொரு கோலையும் போட்டனர்.

போட்டிக்கு பிரதம நடுவராக மரியதாஸ் அனஸ்ரினும், பக்க நடுவராக வெக்ஸ் அருள் நேசன், தி. ராஜ் ஆகியோரும் கடமையாற்றினர். வெற்றிக் கேடயத்தை தமிழீழ துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் சோ. தங்கன் அவர்கள் வழங்கிக் கௌரவித்தார். இப்போட்டியை ஏழாயிரத்திற்கு மேற்பட்ட ரசிகர்கள் கண்டுகளித்தனர். (மி)



**சிந்தனைக்கு**

இலட்சியத்தால் ஒன்றுபட்டு எழுச்சி கொண்ட மக்களை எந்த ஒரு சக்தியாலும் ஒடுக்கிவிட முடியாது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 14-10-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## பொருத்தமான அறிவுரை

"போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் அரசியலில் நேரடியாகப் பங்கு கொள்வதன் மூலமே தமது பிரதேசத்திற்கான சமூக, பொருளாதார அபிவிருத்தியை உறுதி செய்து கொள்ள முடியும்" என்ற ஜேர்மன் அரசியல் நிபுணர் ஹறோலஸ்ரீன் அறிவுரையானது இன்று யாழ். மாவட்ட மக்களுக்கு ஏன் தமிழர்கள் அனைவருக்கும் மிகவும் பொருத்தப்படானதும், தேவைப்பட்டதென்பதும் ஆகும்.

ஏனெனில் தமிழ் மக்களின் அரசியல் விழிப்புணர்வு, ஈடுபாடு என்பதே அவர்களின் அனைத்து உரிமைகளுக்குமான வழிகளைத் திறக்கக்கூடியதாகும். ஜேர்மன் பேராசிரியர் இவ் விடயத்தை இன்னமும் அழுத்தம் திருத்தமாகவே பேசியிருக்க முடியும். அதாவது மக்கள் அரசியல் உரிமைகளைப் பெற்றுக்கொள்ளும்போதே அவர்களின் சமூக, பொருளாதார உரிமைகளும் அபிவிருத்தியும் சாத்தியமானதாகும் எனக் கூறியிருக்க முடியும். அவ்வாறு கூறுவது அரசியல் பேசுவதாக அர்த்தப்படுத்தப்படும் எனக் கருதியோ அன்றி இது வரையில் பேசினால் போதும் என்ற நிலைப்பாடு காரணமாகவோ அவர் அவ்வாறு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கூறியிருக்கக்கூடும்.

போரினால் பாதிப்புக்குள்ளான மக்கள் –அதிலும் குறிப்பாக இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசத்திற்குள் தொடர்ச்சியாக வாழும் மக்கள் தமது அரசியல் விழிப்புணர்வையும், அரசியல் ஈடுபாட்டையும் தொடர்ச்சியாக வெளிப்படுத்துதல் என்பது அவசியமானதாகும். அரசியலில் இருந்து ஒதுங்க முற்படுவதோஅன்றி அரசியலைத் தவிர்த்துக் கொள்வதோ அம் மக்களுக்கு விடிவைத்தரப் போவதில்லை. மாறாகச் சமூக, பொருளாதாரச் சீரழிவிற்கும் இன அழிவிற்குமே இட்டுச் செல்லும்.

எந்தவொரு சமூகத்தையும், இனத்தையும் அரசியல் ஈடுபாட்டில் இருந்து விடுவித்துவிட்டால் அவர்களை ஆள்வதும் அவர்களின் தனித்துவத்தைச் சிதைத்துவிடுவது என்பதும் இலகுவான தொன்றாகி விடும்.அதன் பின்னர் அச்சமூகமானது அடிமை வாழ்விற்கும், ஆக்கிரமிப்பாளர்களின் ஒடுக்கு முறைகளுக்கும். பழக்கப்பட்ட தொன்றானதாகவும் அதனை ஏற்றுக்கொள்ளத்தக்க தொன்றாகவும் மாறி விடும்.

யாழ். குடாநாட்டைப் பொறுத்து இன்று அரசியல் விழிப்புணர்வு ஈடுபாடு, செயற்பாடு என்பது வெகுவாகக் குறைந்து போய்விட்டது என்பது வெளிப்படையானது. ஆனால் போரினால் பெரும் அழிவிற்கும், இழப்பிற்கும் உள்ளாகியதோடு இன்று ஆக்கிரமிப்பிற்கு உள்ளான நிலையிலும் உள்ள மக்கள் இவ்வாறு ஒதுங்கியிருத்தல் முடியாது.

இத்தனைக்கும் யாழ். குடாநாட்டு மக்கள் குறிப்பாக இளைஞர் சமுதாயம் இலங்கையின் சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்தில் இருந்தே பெரும் அரசியல் விழிப்புணர்வு கொண்டவர்களாக அரசியலில் ஈடுபாடு கொண்டவர்களாக செயற்பட்டுள்ளனர். அரசியலில் காத்திரமான பங்குகளும் அவர்கள் வகித்துள்ளார்கள். ஆனால் தற்பொழுது அவர்கள் குறிப்பாக இளைஞர் சமுதாயம் அரசியலில் ஆர்வம், ஈடுபாடு அற்றவர்களாக, விழிப்புணர்வு அற்றவர்களாக மாறியுள்ளனர்.

இத்தகையதொரு நிலை உருவாகுவதற்கு சிறிலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்புச் சூழல் முக்கியமான காரணியாகும். இச் சூழலானது தமிழ் இளைஞர் சமுதாயத்தின் சிந்தனைப்போக்கை திட்டமிட்ட ரீதியில் மழுங்கடிக்கவும், திசை திருப்பி விடவும் முற்படடுள்ளது. இதில் ஓரளவு சிங்கள அரசு வெற்றி கண்டுள்ளது என்றும் கூடக் கூறலாம்.

இன்று யாழ். குடாநாட்டைப் பற்றி வெளியாகும் சில தகவல்கள் பெரும் கவலையளிப்பவையாகவும், ஏமாற்றத்தைக் கொடுப்பதாகவுமே உள்ளது. குறிப்பாக யாழ். குடாநாடு இன்று மதுபானப் பாவனையில் இலங்கையில் முன்னணி வகிக்கும் பிரதேசமாகவுள்ளது. இதே போன்றே எச்.ஐ.வி வைரஸ்சால் பாதிக்கப்பட்டோர் அதிகரித்த மாவட்டமாகவும் கண்டறியப்பட்டுள்ளது. இவற்றைத் தவிர ஒழுக்கச் சீர்கேடுகள், கலாசார சீரழிவுகள் அதிகரித்த போக்கைக் கொண்ட பிரதேசமாகவும் உள்ளது.

இந் நிலைக்கு ஒரு புறம் இவற்றைத் தூண்டுவதற்கான வழிவகைகளைச் சிறிலங்காஅரசும், அதன் ஆயுதப் படைத்தரப்பும் மேற்கொண்டுள்ளதோடு இவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கான தமது கடப்பாடுகளில் இருந்தும் அவை விலகிக் கொண்டுள்ளன. அதாவது தமிழ்ச்சமூகத்தில் ஏற்படும் சீரழிவுகளையே தமது ஆக்கிரமிப்பை நிலை நிறுத்திக் கொள்வதற்கும், தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை மழுங்கடிக்கச் செய்வதற்குமான மார்க்கமெனக் கருதுகின்றன. அதாவது மக்களின் குறிப்பாக இளைஞர்களின் அரசியல் ஈடுபாட்டை இல்லாது ஒழிக்க முயல்கின்றது.

இந் நிலையில் தமிழ் மக்கள் அரசியல் விழிப்புணர்வுடனும், ஈடுபாட்டுடனும் செயற்படாது போனால் சமூக, பொருளாதார அபிவிருத்தியினை உறுதி செய்ய முடியாது போவது மட்டுமல்ல தமிழ் இனத்தின் தனித்துவத்தையே அது கேள்விக்குறியாக்கி விடும்.

ஆகையினால் தமிழ் மக்கள் அரசியலில் கொள்ளும் ஈடுபாடே அவர்களின் எத்தகைய உரிமைகளையும் பெற்றுக்கொள்ள அடிப்படையாக அமைய முடியும். அதாவது சமூக, பொருளாதார அபிவிருத்தி உரிமைகள் மட்டுமல்ல, அவர்களின் சனநாயக மனித உரிமைகள் மற்றும் மனித உரிமைகள் என அனைத்து உரிமைகளையும் வென்றெடுக்க வாய்ப்பளிக்கும். அது மட்டுமல்ல, அரசியல் ரீதியிலான பங்களிப்பு என்பது இல்லாது போனால் போரினால் ஏற்பட்ட அழிவுகள் இழப்புகளை ஈடுசெய்ய முடியாது போவது மட்டுமல்ல, தற்பொழுது எஞ்சியுள்ளவற்றையும் பாதுகாக்க முடியாதொரு அவலநிலை கூடத் தோன்றி விடலாம்.

# சு.க.வைச் சேர்ந்த அனைவருக்கும் அமைச்சு, பிரதிஅமைச்சுப் பதவிகள்

### -உலக சாதனை என்கிறது ஐ.தே.கட்சி

பொய்பேச்சுக்களினால் முழு நாட்டையும் கவர்ந்துள்ள சந்திரிகா கூட்டரசாங்கத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்தோர்க்கே முக்கிய அமைச்சுப் பதவிகளும் பிரதியமைச்சர் பதவிகளும் வழங்கப்பட்டுள்ளன. இது உலக சாதனையாகும் என ஐ.தே கட்சி விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனைத் எமது கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது.

அத்துடன் இதுதொடர்பாக பிரதான கூட்டுக்கட்சியான ஜே.வி.பி மௌனம் சாதிப்பதும் ஏன் என்று புரியவில்லை எனவும் கூறுகிறது.

அண்மையில் மேலும் புதிய பிரதியமைச்சர்கள் நால்வரை நியமிக்க அரசு திட்டமிட்டிருப்பதுடன் அமைச்சரவையில் 75 அமைச்சர்களை நியமித்துள்ளதாக அறிக்கை கூறுகிறது. அரசாங்கம் பதவி ஏற்று 6 மாதங்கள் மட்டுமே கடந்துள்ள நிலையில் உணவுப்பொருட்களின் விலைகள், மின்சாரம், எரிபொருள் உட்படப் பல அத்தியாவசிய பொருட்களின் விலை என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது.

1994 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த சந்திரிகா அரசு அமைச்சர்களின் எண்ணிக்கையை 25 ஆகக் குறைப்பதாக வாக்குறுதியளித்தது. அதன் பின்னர் 2004 ஆம் ஆண்டு பதவியேற்றபோது அமைச்சர்களின் எண்ணிக்கையை விரைவாகக் குறைப்பதென்றும் அவர்களுக்கு வழங்கப்படும் வெளிநாட்டுப்பிரயாணத்துக்கான சகல சலுகைகளும், வாகனங்களும் கட்டுப்படுத்தப்படும் என்றும் தெரிவித்தது. இது தொடர்பாக ஜே.வி.பி மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் அனந்தம் ஆனால் நடப்பவை அதற்கு எதிர் மாறானவையே.

தனது கட்சி எந்த சலுகைகளுக்காகவும் சுயகொள்கையை விட்டுக்கொடுக்காது எனக் கூறிய விமல் வீரவன்சவும் இப்போது மௌனம் சாதிக்கிறார்.

இவையனைத்தையும் ஐ.தே. கட்சி கண்டிக்கிறது என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முச்சக்கர மோட்டார் வண்டிச்சாரதிகள் கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பில் முச்சக்கர மோட்டார் வண்டிச் சாரதிகள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

எரிபொருட்களின் விலை உயர்வு காரணமாகவும், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினாலும் தாம் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குவதாக இவர்கள் தெரிவித்துள்ளனர். இப்பிரச்சினையை ஆராய்ந்து பார்ப்பதற்கு அரசாங்கம் இதுவரை முயற்சி செய்யவில்லையென அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். லேக் ஹவுஸ் நிறுவனத்திற்கு முன்பாக இடம் பெற்ற இவ் ஆர்ப்பாட்டத்திற்கு மூன்று இடங்களிலிருந்து முச்சக்கர மோட்டார் வண்டிகள் வந்தடைந்துள்ளன.

அங்கு அவர்கள் கருத்து தெரிவிக்கையில், முச்சக்கர மோட்டார் வண்டிச்சாரதிகள் குறித்து ஆராய்ந்து பார்த்து உடனடியாக சலுகைகளை வழங்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளனர். அரசாங்கம் கூறுமே தவிர நிவாரணங்களை வழங்க மாட்டாது. அண்மையில் நான்கு பிரதியமைச்சர்களை நியமித்தனர். இவர்களுக்கு செலவு அதிகமாகும். இவற்றை ஒருபுறம் வைத்துவிட்டு வறியமக்கள் குறித்துக் கவனம் செலுத்த வேண்டும். கூட்டமைப்பு அரசாங்கத்தை சரியான வழியில் இட்டுச் செல்லவே மக்கள் விடுதலை முன்னணிக்கு மக்கள் வாக்களித்தனர். தற்போது அவர்கள் என்ன செய்கின்றார்கள்? தமது கொள்கைகளுக்கு முரணான விடயங்களுக்கு அமைச்சரவையில் இருந்துகொண்டு ஒத்துழைப்பு வழங்குகின்றார்கள் எனத் தெரிவித்துள்ளனர்.

# முன்னைய அரசாங்கத்தில் நியமனம் பெற்ற ஊழியர் பணிநீக்கத்திற்கெதிராக ஊர்வலம்

சுகாதார சேவை தொழிற்சங்க கூட்டமைப்பினர் நேற்று எதிர்ப்பு ஊர்வலத்தில் ஈடுபட்டனர்.

கனிஷ்ட சுகாதார சேவை ஊழியர்கள் 309 பேரின் சேவையை இடைநிறுத்தியமையைக் கண்டித்து அவர்கள் இவ்ஊர்வலத்தில் ஈடுபட்டுள்ளனர். குறிப்பிட்ட ஊழியர்களை மீண்டும் உடனடியாக சேவையில் இணைத்துக்கொள்ளுமாறு கோரியுள்ளனர்.

இவ் ஊர்வலம் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு முன்பாக ஆரம்பமாகி பிரதமர் செயலகம் நோக்கி வந்தது. இவர்கள் தமது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பிரதமரின் பங்களிப்பு அத்தியாவசியமானதென கூறி மனு ஒன்றைக் கையளித்துள்ளனர். அரசியல் அழுத்தங்கள் காரணமாக இவ்வாறான நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென சுகாதார சேவை தொழிற்சங்க கூட்டமைப்பின் ஏற்பாட்டாளர் தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து அங்கு கருத்துத் தெரிவிக்கையில்;

அரசியல் காரணங்களுக்காக சுகாதார ஊழியர்களை சேவையிலிருந்து நீக்கியுள்ளனர். முன்னைய அரசினால் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டவர்களை நீக்கி புதிதாக ஊழியர்களை இணைத்துக்கொள்ளும் நடவடிக்கைகளை எமது கூட்டமைப்பு வன்மையாக கண்டிக்கிறது என மேலும் தெரிவித்துள்ளார்.

### துப்பாக்கி கண்டெடுப்பு

வாகரைப்பாதுகாப்பு வனப் பிரதேசத்திலிருந்து ஆயுதங்கள் பல பொலிசாரால் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

எம்-16 ரக இயந்திரத் துப்பாக்கி, அதற்குப் பயன்படுத்தப்படும் ரவைகள், 04 துப்பாக்கி மகசின்கள், கைக்குண்டுகள் உட்படப் பல ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. க்ருணாவின் சகோதரன் றெஜி கொலை செய்யப்பட்ட இடத்திலிருந்து இவ் ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவைகள் இவர்களால் கைவிடப்பட்ட ஆயுதங்களாக இருக்கலாமென படையினர் தெரிவித்துள்ளனர்.

### நாளொன்றுக்கு 15 ஆயிரம் அடையாள அட்டை

2005 ஆம் வருட இறுதிக்குள் நாட்டில் சகலருக்கும் அடையாள அட்டைகள் வழங்கப்படும் என அரசாங்கம் அறிவித்திருக்கிறது. 28 இலட்சம் மக்களின் அடையாள அட்டைகளை வழங்குவதற்கு விசேட பணிப்பீடம் அமைத்து அதில் நாளொன்றுக்கு 15 ஆயிரம் அடையாள அட்டைகள் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானம் மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# அளவுக்கு அதிகமான மாத்திரை வழுங்கப்பட்டதால் சிறுவன் மரணம்

(கொழும்பு)

தமது பிள்ளையின் தலைவலி விரைவில் குணமடைய வேண்டும் என்பதற்காக அளவுக்கதிகமான மாத்திரைகளைப் பெற்றோர் கொடுத்ததால் ஐந்தே வயதான சிறுவன் பரிதாபகரமாக உயிரிழந்தான்.

சிறிலங்காவின் வத்தளப்பகுதியில் இடம் பெற்ற இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது

தனது நண்பர்களுடன் பந்தடித்து விளையாடிய போது தலையில் ஏற்பட்ட காயத்தின் காரணமாக இச்சிறுவன் தலைவலியினால் வருத்துவதை அவதானித்த பெற்றோர் வலிகுணமடைய ஓரிரு பரசிற்றமோல் வில்லையைக் கொடுத்தனர்.

இதன் பின்னரும் வலிகுணமடைவதற்கான அறிகுறி ஏதும் தென்படாததால் மாத்திரை வில்லைகளின் எண்ணிக்கையை அதிகரித்தனர். இதன் விளைவாக ஒரு நாளிற்குள் இருபத்தைந்து பரசிற்றமோல் வில்லைகளை விழுங்கிய் சிறுவன் ஆபத்தான நிலையில் றாகம வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு உயிரிழந்தான்.

# "அரசியல் தெரியாத தலைமைத்துவத்தின் கீழ் அரசியல் செய்ய நான் விரும்பவில்லை"

## -அமைப்பாளர் பதவியிலிருந்தும் சுமங்கள தேரர் விலகல்

ஜாதிக ஹெல உறுமயவில் ஏற்பட்டுள்ள முறுகல் மேலும் வலுவடைந்துள்ளது. இதன் மற்றும் ஒரு கட்டமாக அண்மையில் தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகிய கொலன்னாவ சுமங்கல தேரர் இன்று தாம் இதுவரை வகித்து வந்த ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளர் நிலையில் இருந்தும் விலகவுள்ளார். இது தொடர்பில் கருத்துரைத்த கொலன்னாவ சுமங்கல தேரர் அரசியல் தெரியாத சாதாரண தலைமைத்துவத்தின் கீழ் அரசியல் செய்வதனை தாம் விரும்பவில்லை என்பதன் காரணமாகவே தமது தேசிய அமைப்பாளர் பதவியை விட்டு விலகுவதாக தெரிவித்தார். இதற்கிடையில் மல்வத்த மற்றும் அஸ்கிரிய மகாநாயக்கர்களின் ஆலோசனையுடன் தாம் எதிர்கால பணிகளை மேற்கொள்வதாக ஜாதிக ஹெல உறுமயவின் செயலர் உடுவே தம்மாலோக தெரிவித்துள்ளார் அவர் நேற்று இந்த இரண்டு மகாநாயக்கர்களையும் சந்தித்து சுமார் ஒரு மணி நேரமாக உரையாடினார். (32)

# கற்றாக் சத்திர சிகிச்சைக்கு பதிவுசெய்யக் கோரல்

யாழ்.போதனா மருத்துவ மனையில் சேவையாற்றும் கண் சத்திரசிகிச்சை நிபுணர் சிவந்தா அவர்களினால் எதிர்வரும் சனிக் கிழமை கண்ணில் தோன்றும் வெண் குறிக்கான கற்றாக் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட வுள்ளது. இதற்கு தெரிவு செய்யப் படும் நோயாளர்களே சத்திரசிகிச் சைக்கு உட்படுத்தப்படுவார்கள். என்வே முன்னர் பதிவுகளை மேற் கொண்டவர் களும்,புதிதாக சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டியவர்களும் இன்று அல்லது , நாளை காலை 9.00மணிமுதல் 12.30மணிவரை புதுக்குடியிருப்பில் உள்ள டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் வெளிநோயாளர் பிரிவில் சமுகம் தந்து தங்களது சத்திரசிகிச்சைக் கான உறுதிப்படுத்தலை மேற் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றது. (08)

# யாழ்.தேசியக் கல்வியியல் கல்லூரியின் மாணவர்கள் மத்தியில் குழப்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியல் கல்லூரியில் கல்வி பயிலும் ஆண் ஆசிரியர்களது வகுப்புக்கள் யாவும் நேற்று முன்தினத்திலிருந்து அங்குள்ள மலசல கூடங்கள் மீள் துப்புரவு செய்யவேண்டும் என்ற காரணத்தைக் காட்டி ஆண் ஆசிரியர்களை வீடுகளுக்குச் செல்லுமாறு நிர்வாகம் வேண்டுகோள் விடுத்திருந்தது. இதற்கமைய ஆண் ஆசிரியர்கள் தமது விடுதிகளில் இருந்து வெளியேறினார்கள். ஆனால் பெண் ஆசிரியர்கள் வெளியேற்றப்படாமல் இருந்தார்கள். நேற்றைய தினம் பெண் ஆசிரியர்களுக்கு மட்டும் அங்கு வகுப்புக்கள் நடைபெற்றதை அவதானித்த பெரும் எண்ணிக்கையான ஆண் ஆசிரியர்கள் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையுடன் தொடர்புகொண்டு நிலைமையை தெரியப்படுத்தினர்.

அதன் பின்னர் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினர் நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது வகுப்புக்கள் இடம்பெறவில்லையென நிர்வாகத்தினர் மறுப்புத் தெரிவித்தனர்.

பரீட்சைக்காலம் நெருங்குவதால் பெண் ஆசிரியர்களுக்கு இவ் வகுப்புக்கள் இடம்பெற்றுள்ளமை மாணவர்கள் மத்தியில் பெரும் குழப்பத்தையும் சீற்றத்தையும் உண்டுபண்ணியுள்ளது. 36)

## மாவீரர்...

இதனைத் தொடர்ந்து மாவீரர், போராளி குடும்பங்களிடம் கையளிப்பதற்காக அமைக்கப் பட்ட புதிய வீடுகள் கையளிக்கும் நிகழ்வு ஆரம்பமானது.

புதிய வீடுகளை கடற்புலிகளின் தளபதி மங்களேஸ், கடற்புலிகளின் பொறுப்பாளர்களில் ஒருவரான மோகன், பூநகரி அரசியல்துறைப் பொறுப்பாளர் ஈகைவேந்தன், பூநகரி கடற்றொழிலாளர் சமாசத்தலைவர் யோ.பிராண்சிஸ், பூநகரிப் பிரதேச செயலாள் சிறீஸ்கந்தகுமார் ஆகியோர்5 வீடுகளுக்குமான நாடாவை வெட்டித் திறந்து வைத்து வீடுகளைப் பெற்றோரிடம் கையளித்தனர். தொடர்ந்து மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்கு அவர்களின் பெற்றோர் மலர்மாலை அணிவித்தனர். அடுத்ததாக நடைபெற்ற நிகழ்வில் சிறப்புரையினை கடற்புலிகளின் பொறுப்பாளர்களில் ஒருவரான மோகன் , பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் கா.கார்த்திகேசு ஆகியோர் நிகழ்த்தினர். நன்றியுரையை பூநகரிப்பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் இராசன் நிகழ்த்தினார். (லோ,தீ)

## இரு...

எம். பெரேஸ் 44ஆவது சந்தேக நபரான பொலிஸ் அதிகாரியான புஸ்பலால் என்பவரையும் அடையாளங்காட்டியிருந்தனர்.

சந்தேக நபர்களான பொலிசார் 44 பேர் இவ் அடையாள அணிவகுப்பிற்கு நீதவான் இ.த. விக்னராஜா முன்னிலையில் உட்படுத்தப்பட்டனர். அவர்களில் இருவரே அடையாளம் காட்டப்பட்டுள்ளனர். பொலிசாரின் சார்பில் சட்டத்தரணிகளான வி.ரி. சிவலிங்கம், ஆ. தவபாலன் மற்றும் ஏ.ஈ. ஏகநாதன் ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

இதேவேளை, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் சார்பில் மனித உரிமைகள் சட்டத் தரணி எம். ஹமிறீயஸ் ஆஜராகியிருந்தார்.

அடையாளம் காட்டப்பட்ட பொலிசார் இருவரையும் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஒருவர் தரத்திலான ஆட்பிணையில் செல்ல நீதவான் அனுமதி வழங்கினார். அத்துடன் நீதிமன்றின் முன் அனுமதியின்றி யாழ். குடாநாட்டை விட்டுவெளியேற முடியாது எனவும் அறிவித்துள்ளார்.

அத்துடன் எஞ்சிய 42 பொலிசாரையும் 15ஆயிரம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் செல்லவும் நீதவான் அனுமதித்துள்ளார். எஞ்சிய சந்தேக நபர்கள் இருவர் தொடர்பான அணி வகுப்புத் தொடர்ந்து இன்று இடம்பெறவுள்ளது. இவ்வழக்கின் சந்தேக நபர்களாக அப்போது கடமையில் இருந்த 46 பொலிசாரும் குறிப்பிடப்பட்டிருந்தனர். (35,27)

## திருமலையில்...

சீனக்குடாச் சந்தியில் மரக்கட்டைகளைப் போட்டு எரிபொருள், கோதுமை மா ஏற்றிச் சென்று பாரஊர்தி தடைசெய்ய எடுத்துக் கொண்ட முயற்சி படையினரின் நடவடிக்கையினால் பலனளிக்கவில்லையென்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. தகவல் கிடைத்து இராணுவம் அந்த இடத்திக்கு விரைந்து சென்று மரக்கட்டைகளை அகற்றி திரண்டிருந்த கூட்டத்தைக் கலைத்து போக்குவரத்தை வழமை நிலைக்கு கொண்டு வந்தனர் என்றும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. அதனையடுத்து எரிபொருள் மற்றும் கோதுமை மா ஏற்றிச் செல்லும் பாரஊர்திகள் ஒரு அணியாகச் சேர்த்து வெளிமாவட்டங்களுக்கு இராணுவப்பாதுகாப்புடன் அனுப்பிவைக்கும் திட்டம் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டதாகவும் அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை திருமலையிலிருந்து நடத்தப்படும் தனியார் பேருந்து சேவைகள், மக்கள் மயப்படுத்தப்பட்ட பேருந்து நிறுவனத்தின் சேவைகள் நேற்று ஸ்தம்பித்தன. எனினும் வவுனியாவிலிருந்து இரண்டு அரச பேருந்துகள் நேற்றுப் புதன் காலை பயணிகளுடன் திருமலைப் பேருந்து நிலையத்தை வந்தடைந்தன. பின்னர் பயணிகளை ஏற்றிக் கொண்டு மீண்டும் அந்தப் பேருந்துகள் வவுனியா திரும்பின. கொழும்பிலிருந்து வந்த பேருந்து ஒன்று தம்பலகமம் சந்தியில் வைத்து திருமலை செல்ல விடாது தடுத்து நிறுத்தப்பட்டதாகவும் பின்னர் அந்தப் பேருந்து கந்தளாய்க்குத் திரும்பிச் சென்றதாகவும், பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. உடனடியாக பொலிஸ் உயரதிகாரிகள் அந்தப் பேருந்தை திருமலைக்கு அனுப்பி வைக்கும்படி கந்தளாய் பொலிஸாருக்கு செய்தி அனுப்பினரென்றும், பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. திருமலையில் இயல்புநிலை பாதிக்கப்படவில்லையென்றும் திருமலை நோக்கிவரும் பேருந்தைக் கூட திருப்பி அனுப்ப வேண்டாம் என்றும், அப்பகுதி பொலிஸ் நிலையங்களுக்கு பொலிஸ் தலைமைப் பீடம் அறிவுறுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (25)

## விபத்தில்...

மனைக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டுப் பின்னர் புதுக்குடியிருப்பு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். இச் சம்பவம் நேற்று காலை10.30 மணிக்கு இடம் பெற்றது. இவர் இன்று காலை யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளார். (05)

## கடற்...

மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது அவர்களது படகில் ஏற்றிவைக்கப்பட்டிருந்த சூள்விளக்கு அணைந்து விட்டது. இதனையடுத்து விசைப் படகுகள் மூலம் அம் மீனவர்களது படகை நெருங்கி அவர்களது படகுக்குள் இறங்கிய கடற் படையினர் கடற்றொழிலாளர்கள் இருவரையும் கண்மூடித்தனமாகத் தாக்கியுள்ளனர். இதனால் தாக்குதலுக்குள்ளான இருமீனவர்களும் நேற்றுக்காலை ஏனைய மீனவர்களது உதவியுடன் கரைசேர்க்கப் பட்டனர். இச்சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட மீனவர்களால் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசச் சம்மேளனத்திடம் முறைப்பாடு செய்துள்ளனர். கடற்படையினரது இச் செயற்பாடு குறித்து கடற்றொழிளாளர் சமாசம் கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

இதேவேளை கடந்த திங்கட்கிழமை நள்ளிரவு வேளையில் வல்வெட்டித்துறை கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த பாலசுப்பிரமணியம் பாலேந்திரன் எனும் மீனவர் கடற்படையினரால் தாக்கப் பட்டுள்ளார். அத்துடன் அவரது சகோதரரான பாலசுப்பிரமணியம் செல்வேந்திரா எனும் மீனவர் அடுத்த நாள் காலை வேளை கரையோரக் காவலரணில் வைத்து படையினரால் தாக்கப்பட்டுள்ளார்.

இதனிடையே மீண்டும் அதிகரித்து வரும் மீனவர்கள் மீதான தாக்குதல்கள் திட்டமிட்டு கடற்படையினரால் மேற்கொள்ளப்படுவதாக வல்வெட்டித்துறை மீனவர் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது. (33, 27)

## வவுனியாவில்...

பட்டுப் பின்னர் பாழடைந்த கிணற்றினுள் தள்ளப்பட்டுக் கொலை செய்யப்பட்டிருப்பதாக ஆரம்ப விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது கொலை செய்யப்பட்டவர் மதினாநகர் பூந்தோட்டத்தை கப்புடையார் மொகமட் அமீர் (வயது 27) என அடையாளம் காணப்பட்டுள்ளார் ஆட்டோ கடத்தப்பட்டு இருப்பதாகவும் தெரிய வருகிறது. சம்பவம் இடம் பெற்ற இடத்திற்குச் சென்ற வவுனியா மாவட்ட நீதவான் மாணிக்கவாசகர் இளஞ்செழியன் உடனடியாக விசாரணைகளினை மேற்கொள்ளுமாறும் ஓமந்தை, உயிலங்குளம் மதவாச்சி, ஹொரவப் பொத்தானை வீதி ஆகியவற்றினூடாக ஆட்டோ கடத்தப்படாமல் இருக்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார். இது போன்று சம்பவம் நடந்திருப்பது இரண்டாவது முறையாகும். ஏற்கனவே 1999ஆம் ஆண்டு கணபதி என்ற ஓட்டோசாரதி புசலாவை பகுதியில் கொண்டு செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது

இச்சம்பவத்தில் நான்கு பேர் ஆட்டோவினை வாடகைக்கு அமர்த்தி செட்டிகுளம் சென்று உள்ளனர் மதியம் 1.30 மணியளவில் சம்பவம் இடம் பெற்ற இடத்திற்கு பக்கத்தில் உள்ள சந்தியில் 5 பேர் நின்றதை மக்கள் கண்டுள்ளனர் இதன் பின்னர் மதியம் இரண்டு மணியளவில் சம்பவம் இடம் பெற்ற கிணற்றடியில் சிவப்பு நிற சேட் அணிந்த ஒருவர் நடமாடியதாகவும், சந்தேகம் கொண்டு அவரை பார்க்கச் சென்ற போது அவர் தப்பித்துச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதன் பின்னர் கிணற்றுக்குள் பார்த்த போது கிணற்றினுள் சடலம் கிடந்ததாகப் பொலிசாருக்கு சம்பவத்தைக் கண்டவர்கள் முறையிட்டுள்ளனர். இரவு 8 மணியளவில் சம்பவம் இடம் பெற்ற இடத்திற்குச் சென்ற மாவட்ட நீதவான் கிணற்றுக்குப் பக்கத்தில் இருந்த பற்றைகளினூடாக நடமாட்டம் இருந்ததை அவதானித்து உள்ளார் மேலதிக விசாரணையினைச் செட்டிகுளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சில்வா மற்றும் குற்றத்தடுப்புப் பதில் பொறுப பதிகாரி தர்மதாச தலைமையில் இடம் பெற்று வருகின்றது மூன்று இன உறுப்பினர்களும் உள்ள ஆட்டோ சங்க உறுப்பினர்களுக்கு எதிராகத் தொடர்ந்தும் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெற்று வருவதாகவும் இதனைத் தடுக்க அனைத்துத் தரப்பினரும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஆட்டோ சங்கத்தலைவர் தர்மலிங்கம் பிரபாகரன் கேட்டுள்ளார் இந்தச் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஆட்டோச் சாரதிகள் கறுப்புக் கொடி கட்டித் தமது எதிர்ப்பினை காட்டியுள்ளனர். (21)

## பிரச்சினைகள்...

விவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் தெரிவித்துள்ளார்.

இரு தரப்பினிடையே சமாதான நடைமுறைகளுக்கு ஏற்பாடு செய்வது மட்டுமே எங்கள் வேலையென ஆரம்பம் முதல் கூறிவருகின்றோம். தெற்குப் பிராந்திய அரசியலில் ஈடுபடுவது என்பது எங்களின் வேலையல்ல. சிங்களக் கட்சிகளுக்கிடையிலான பிளவை அவர்கள் தங்களுக்குள் தீர்த்துக் கொள்ளவேண்டிய விடயம். எங்களின் வேலை இலங்கை அரசில் யார் இருந்தாலும் அவர்களோடும், புலிகளின் தலைமையோடும் தொடர்புகளை ஏற்படுத்துவதாகத் தான் இருக்கும் என மேலும் தெரிவித்தார்.

இதேவேளை சர்வதேச நிதியுதவி என்பதில் பல பிரிவுகள் இருக்கின்றது. இதில் சில உதவிகள் குறிப்பாக மனிதாபிமான உதவிகள் போன்றவை எப்படியானாலும் வழங்கப்படக்கூடும். அதேவேளை சில கொடையாளி நாடுகள் தாங்கள் உறுதியளித்த முழுநிதி உதவிகளையும் வழங்குவதில் தயக்கம் காட்டுகின்றார்கள் என்று எமக்குத் தெரியும். அதனால் இவ் விடயத்தில் பலதரப்பட்ட கருத்துக்கள் நிலவுகின்றது என்பதுதான் யதார்த்தம். ஆனால், உறுதியளிக்கப்பட்ட சர்வதேச நிதியுதவி முழுமையாகக் கிடைக்க வேண்டுமென்றால் இருதரப்பினரும் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் தொடக்கவேண்டும். இரு தரப்பினரும் ஒருவரோடு ஒருவர் மீண்டும் பேச வேண்டியதன் அவசியத்தை உணர்வார்கள் என்கின்ற நம்பிக்கை எனக்குள்ளது. பிரச்சினைகள் மிகவும் தீவிரமானவை என்பதில் சந்தேகம் இல்லை. ஆனாலும் அவர்களுக்கிடையிலான இடைவெளிகள் குறைக்கப்பட்டு சமாதானப் பாலம் கட்டப்படவேண்டும். அதனைவிட மாற்று வழி இருப்பதாகத் தெரியவில்லை என்றார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.